2017 ஜூன் 13
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 18 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 089

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණි දිනපතා
நவமணி
மிழ்பேசும் மக்களின் சுதந்தி ரல்

இன முறுகலை நல்லாட்சி கட்டுப்படுத்துமா? 09»

விடைபெற்றார் வறூஸைன் போல்ட் 12»

சம்பிக்க அரவணைப்பில் ஞானசார தேரர்

அவரே மறைத்தும் வைத்துள்ளார்

சமசமாஜ கட்சி செயலாளர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

பொலிஸார் பல குழுக்கள் அமைத்து தேடிவருகின்ற பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவே மறைத்து வைத்துள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர்

11 »»»»»

மறுக்கிறார் சம்பிக்க

■ ஆதில் அலி சப்ரி

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சட்ட ஆலோசனைகள் வழங்குவதும்,

11 »»»»»

மைத்திரி, மஹிந்தவின் இப்தார் நிகழ்வுகள்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்தும் இப்தார் எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இதே நேரம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்தும் இப்தார் எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பு -07 விஜேராமை வீதியிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறும்.

மஹியங்கனை முஸ்லிம் கடையை பெரும்பான்மை வர்த்தகர் எரித்தார்

மஹியங்கனை நகரில் முஸ்லிம் ஒருவருக்குரிய பாதணி கடைக்கு தீ வைத்தவர் பாதணிக்கு கடைக்கு முன்னாலுள்ள நகைக் கடை உரிமையாளரே எனத் தெரிவித்த பெரும்பான்மை மதவர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டு எச்சரித்து விடுவிக்கப்பட்டார்.

மற்றொரு பெரும்பான்மை வர்த்தகர் குற்றச்சாட்டு

கடந்த வெள்ளியன்று இரவு 9 மணியளவில் பஸ்தரிப்பு நிலையத்தில் உள்ள ரிச் சூ பௌஸ் பாதணிகள் விற்பனை நிலையம் தீ வைக்கப்பட்டது யாரால் என்பதில் சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில் எரிக்கப்பட்ட கடைக்கு முன்னாலுள்ள நகைக் கடை உரிமையாளர்

11 »»»»»

நல்லெண்ணம் கட்டியெழுப்பப்படுகையில் இன மோதலை ஏற்படுத்த முஸ்தீபு

முன்னாள் அமைச்சர் லலித் கவலை

■ பிரதீப் தர்மரத்ன, அரநாயக்க

நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு சிறப்பான முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்படும் போது இனவாதத்தைக் கிளப்பி இனங்களுக் கிடையே மோதலை ஏற்படுத்த முற்படுவது கவலைக்குரிய விடயம் என முன்னாள் சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க கூறினார்.

அரநாயக்க சுகாதார சேவை அதிகாரியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற அரநாயக்க பிரதேச

11 »»»»»

தடைகளால் நாம் விழ மாட்டோம்

கட்டார் நிதி அமைச்சர்

அரபு நாடுகளின் தடைகளால் கட்டாரின் பொருளாதாரத்தை வீழ்த்த முடியாது என்றும் கட்டாரின் பொருளாதாரத்தையும் நாணயத்தையும் அது இலகுவாக பாதுகாத்துக்கொள்ளும் என்றும் அந்நாட்டு நிதியமைச்சர் அலி ஷெரீப் அல் இமாதி தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்டார் மீதான தடை முழுப் பிராந்தியத்தின் பொருளாதாரத்தையும் பாதிக்கும்

11 »»»»»

அமைச்சு பதவியை தூக்கி எறிய எந்த நேரமும் நான் தயார்

அமைச்சர் றிஷாத்

முஸ்லிம் சமூகத்திற்கு உள்நாட்டில் எந்த நியாயமும் கிடைக்காவிடின் ஜெனீவா வரை சென்று நீதி கேட்பதற்கும் நாங்கள் தயங்கப்போவதில்லை எனவும் வேண்டுமெனில் அமைச்சுப் பதவியை தூக்கி

11 »»»»»

உயிர் அச்சுறுத்தலால் நேற்றும் ஆஜராகாத ஞானசார

தனக்கு உயிர் அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதாக தெரிவித்து பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்றைய தினமும் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

அவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று கொழும்பு, மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்றபோதே குறித்த தேரரின் சட்டத்தரணி மேற்கண்ட காரணத்தை வெளியிட்டார்.

இவ்வழக்கு விசாரணையின்போது சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுப் பத்திரத்திற மொன்றும் நீதிமன்றில் தாக்கல்

11 »»»»»

புதிய கட்சிகள் தொடர்பில் வியாழனன்று இறுதி முடிவு

■ அ. அருண் பிரசாந்த்

நேர்முகப் பரிட்சைக்கு உட்படுத்தப்பட்ட புதிய கட்சிகளை தெரிவு செய்வது தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமையன்று

11 »»»»»

ஹஜ், உம்ரா கடமைகளுக்கு கட்டார் மக்களுக்கு தடையில்லை

அல்லாஹ்வின் வீடு அனைவருக்கும் திறந்திருக்கும்

சவூதி அரசு அறிவிப்பு

ஹஜ் மற்றும் உம்ரா ஆகிய முக்கிய வழிபாடுகளுக்கு மக்காவிலுள்ள அல்லாஹ்வின் வீடு அனைவருக்கும் திறந்தே இருக்கும் என சவுதி அரேபியா அறிவித்துள்ளது.

கட்டார் வாழ் மக்களுக்கு ஹஜ் மற்றும் உம்ரா வழிபாடுகளை மேற்கொள்ள சவுதி அரசாங்கம் தடை விதித்துள்ளதாக வெளியாகிய

11 »»»»»

வட மாகாண கல்வி அமைச்சர் இராஜினாமா

வடமாகாண சபையில் தற்போது நிலவும் சர்ச்சைகளை அடுத்து கல்வி யமைச்சரான தம்பிராஜா குருகுலராசா, தனது இராஜினாமா கடிதத்தை தமிழரசுக் கட்சித் தலைவரான மாவை சேனாதிராஜாவிடம் நேற்று கையளித்தார்.

தனக்கு எதிரான

11 »»»»»

இனவாதத்தை கட்டுப்படுத்தாவிடின் மஹிந்தவின் நிலையே நல்லாட்சிக்கும்

எஸ்.எம். மரிக்கார் எம்.பி. எச்சரிக்கை

■ அ. அருண் பிரசாந்த்

இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகளை எடுக்காவிடின் மஹிந்த அரசுக்கு ஏற்பட்ட நிலைமையே இந்த அரசுக்கும் ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். மரிக்கார் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

அத்தோடு, மக்கள் மத்தியில் அரசின் மீதான நம்பிக்கை குறைந்து கொண்டு வருவதாகவும் எனவே, இனவாதிகளைக் கட்டுப்படுத்த அரசு துரித செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

11 »»»»»

திருமலை சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு நீதி கோரி மனித சங்கிலி போராட்டம்

(செங்கலடி நிருபர்)

திருகோணமலை மல்லிகைத்தீவு பெரியவெளிக் கிராமத்தில் சிறுமிகள் மூவரை வன்புணர்வுக்குட்படுத்தியதாக கூறப்படும் சம்பவத்தை கண்டித்தும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

குற்றவியல் சட்டக்கோவையில் பாலியல் குற்றத் தண்டனை கடுமையாக்கப்பட வேண்டும், காலத்தைக் கடத்தாது சுவர்களை கைதுசெய்ய வேண்டும், நீதிமன்றத்தின் சுயாதீனம் காக்கப்பட வேண்டும், சட்டத்தரணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மனித சங்கிலிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக முன்றலில் நடைபெற்ற மனிதசங்கிலிப் போராட்டத்தில் பல்கலைக்கழக தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

மல்லிகைத்தீவு சிறுமிகள் துஷ்பிரயோகம் திருமலை மக்கள் பிரதிநிதிகள் ஏள் மௌனம், குற்றவாளிகளுக்கு ஆதரவாக பேரணி நடாத்தும்போது குற்றமிழைக்கப்பட்ட சிறுமிகளுக்காக பேரணி நடாத்த ஏள் தயக்கம், வழக்கு விசாரணையை திருகோணமலை நீதிமன்றத்துக்கு மாற்று, திருமலை மக்கள் பிரதிநிதிகளே ஏன் மௌனம், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், மல்லிகைத்தீவு சிறுமிகள் துஷ்பிரயோகம் நல்லாட்சி அரசே ஏள் மௌனம், வழக்குத் தீர்ப்பு குற்றவாளிகளுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும், நல்லாட்சி அரசே கால தாமதம் ஏள், போன்ற பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களையெழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். இங்கு கலைப் பிரிவு மாணவி செல்வி அஜந்தினி வள்ளியசிங்கம் கருத்து தெரிவிக்கையில், சின்னஞ்சிறிய குழந்தைகளுக்கு நடைபெற்ற அநீதிக்கு நிச்சயமாக தண்டனை வழங்கப்பட வேண்டும் இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மூலம் இன்னுமொருமுறை சிறுவர்களுக்கோ பெண்களுக்கோ இவ்வாறான துர்ப்பாக்கிய நிலை உருவாகாத வகையில் பாதுகாக்க முடியும்.

சிறுவர்களுக்கு எதிராக ஏற்கனவே நடைபெற்ற கொடூரங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தால் இத்தகைய சம்பவம் இடம்பெற்றிருக்காது. கண்மூடித்தனமாக இருக்கும் அரசாங்கம் நல்லாட்சியில் அங்கத்தவர்களாக காணப்படும் சமூக உறுப்பினர்கள் இதற்கான ஒரு சிறந்த முடிவை எட்ட வேண்டும். அதன் மூலம் எமது சமூகத்தின் பாரம்பரிய பழக்க வழக்கங்களின் ஊடக சிறுவர்கள் மற்றும் பெண்களைப் பாதுகாக்க முடியும் என்றார். மல்லிகைத்தீவு பெரியவெளிக் கிராமத்திலுள்ள பாடசாலையொன்றில் கட்டட நிர்மாண வேலையில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்கள் சிலர் பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற எட்டு வயது சிறுமிகள் மூவரை வன்புணர்வுக்குட்படுத்தியதாக கூறப்படும் சம்பவத்தை கண்டித்து மனித சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.

ஹட்டன் கொழும்பு பஸ் சேவை

(ஹட்டன் க.கிஷோந்தன்)

ஹட்டன் டிப்போவினால் கொள்வனவு செய்யப்பட்ட புதிய 10 பஸ்களில் இரண்டாவது பஸ் நேற்றுமுன்தினம் இரவு 7.20 மணியளவில் புதிய சேவையாக கொழும்பு நோக்கி பயணித்தது.

ஹட்டன் பிரதேச மக்களின் நலன் கருதி 10 பஸ்கள் 3 கோடி ரூபா நிதியினை செலுத்தி மிதிப்பணத்தினை தவணை அடிப்படையில் வழங்கும் வகையில் இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான 10 பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்த பஸ்களில் இரண்டாவது பஸ்யே நேற்றுமுன்தினம் ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக உடுகல சூரிய தலைமையில் கொழும்பு நோக்கி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த பஸ் கொழும்பில் இருந்து மீண்டும் ஹட்டன் நோக்கி அதிகாலை 5.20 க்கு புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுக்கு ஹட்டன் டிப்போவின் அதிகாரி அநுர தொடந்தெனிய உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சொந்த இருப்பிடங்களுக்கு செல்ல அழுத்தம் கொடுக்கும் மக்கள்

(ஏ.ஏ.எம்.பாயில் எம்.எல். எஸ்.மொஹம்மத்)

இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டபின் தற்காலிக தங்குமிட முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு தம்மை அனுப்பி வைக்குமாறு அதிகாரிகளிடமும் அரசியல் தரப்புகளிடமும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். வெள்ள அச்சுறுத்தல் நிலவிய பகுதி அகதிகள் பெரும்பாலானோர் இருப்பிடம் திரும்பியுள்ள போதிலும் மேலும் சிலர் மண்சரிவு அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவுவதால் தொடர்ந்தும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகமானோர் மண்சரிவில் தமது வீடுகளை முழுமையாகவும் பகுதிகளாகவும் இருப்பிடங்களை இழந்தவர்களாவர். ஏனையோர் மண்சரிவு அச்சுறுத்தல் காரணமாக அரசாங்க அறிவித்தல்கள் மூலம் தமது வசிப்பிடங்களை விட்டும் வெளியேற்றப்பட்டு தற்போது முகாம்களில் வசித்து வருபவர்களாவர்.

இவ்வாறு எஞ்சிய பகுதியினரே தமது இருப்பிடம் செல்ல அனுமதி கோருகின்றனர். அகதி முகாம்களில் குடி நீர் மலசலகூட விடயங்களில் குறைபாடுகள் நிலவுவதை சுட்டிக் காட்டும் இவர்கள் தமது இருப்பிடங்களில் நிலவும் குறைபாடுகளை சுட்டிக் காட்டி தமது அதிருப்தியையும் வெளிவிடுகின்றனர்

அத்துடன் தாங்கள் இதுவரை செய்து வந்த தமது வழக்கமான தொழில்களுக்கு செல்ல வேண்டிய தேவை இருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர். இதேவேளை தமது இருப்பிடங்களை இழந்தவர்களும் எச்சரிக்கை நிலவுகின்ற நிலங்களிலிருந்து வெளியேறுவதாயின் தமது நிலங்களுக்கான பிரதியீடாக பாதுகாப்பான இடங்களில் இருப்பிடங்கள் அமைத்து தரவேண்டுமெனவும் தங்குமிட அசௌகரியங்களை நிவர்த்தி செய்து தருமாறும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அம்பியூலன்ஸ் வண்டி விபத்தில் சாரதி மரணம்

(நீர்கொழும்பு நிருபர்)

நீர்கொழும்பில் அம்பியூலன்ஸ் வண்டி விபத்துக்குள்ளாகி சாரதி மரணமடைந்தார். கிளிநொச்சி வைத்திய சாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நோயாளியை எடுத்துச்சென்ற அம்பியூலன்ஸ் வண்டி நீர்கொழும்பு பால்தி சந்தியில் விபத்துக்குள்ளானது. பிரதான வீதியில் வந்த இந்த அம்பியூலன்ஸ் குறுக்கு பாதையிலிருந்து வேகமாக வந்த கார் மோதுண்டதில் அம்பியூலன்ஸ் சாரதி ஸ்தலத்திலேயே பலியானார். அதில் பயணித்த உதவியாளரும், டாக்டரும் சிறு காயங்களுடன் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்துக்குள்ளான அம்பியூலன்ஸ் சாரதி கிளிநொச்சி, கணேசபுரம் பிரதேசத்தைச்சேர்ந்த யோகரத்னம் ராஜேந்திரன் எனும் சாரதியே மரணமடைந்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தென் மாகாண சபை உதவி

(வெலிகம நிருபர்)

கடந்த சில வாரங்களுக்கு முன் தென் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு வழங்கிய உதவிகளுக்கு மேலதிகமாக தென் மாகாண சபையும் உதவிகள் வழங்க முன் வந்துள்ளதாக தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா தெரிவித்தார்.

தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு விடையளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் கூறுகையில்,

இம் மாகாணத்தில் 40 சதவீத மானோர் பாதிக்கப்பட்டனர். 53 பேர் உயிரிழந்துள்ளதுடன் 75 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மத்திய அரசு வழங்கிய பண உதவிக்கு மேலதிகமாக 25 ஆயிரம் ரூபா தென் மாகாண சபையால் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களின் வீடுகள் திருத்தப் பணிக்காக விசேட கடன் திட்டமொன்றும் அமுல்படுத்தப்படவுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை சுத்தம் செய்ய, பாதிக்கப்படாத உள்ளூர் மன்றங்களின் ஊழியர்களின் உதவிகளைப் பெறவுள்ளதோடு தேவையான உதவிகளும் பெறப்படவுள்ளன. அசுத்தமடைந்துள்ள கிணறுகளை இரைத்து சுத்தப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

மின்சாரம் தாக்கி பெண் பலி

(வெலிகம நிருபர்)

வீதியில் கிடந்த மின் வயரைத் தூக்கி அப்புறப்படுத்த முயற்சித்த பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் வெலிகம உடுப்பில பகுதியில் இடம்பெற்றுள்ளதாக கொடவில பொலிஸார் தெரிவித்தனர்.

60 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். குறித்த பெண் காலையில் கடைக்குச் சென்று கொண்டிருந்த போது வீதியின் குறுக்கே இம் மின் வயர் கிடந்துள்ளது. இதனை அப்புறப்படுத்த கையால் தொட்ட நிலையில் மின்சாரம் தாக்கியிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மின்சார சபையின் வெலிகம கிளைக்கு இது விடயமாக தெரிவித்ததையடுத்து ஸ்தலத்துக்கு வந்த மின்சார சபை ஊழியர்கள் மின்சாரத்தை துண்டித்து குறித்த பெண்ணின் சடலத்தை மீட்டனர். மேலதி பரிசோதனைக்காக பெண்ணின் சடலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கேகாலை பிராந்திய நளீமிய்யா பழைய மாணவர் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் குடும்ப ஒன்றுகூடலும் கடந்த சனியன்று அஷ்ஷெய்க் திஷாத் நளீமி தலைமையில் மாவனல்லை ஹுயா மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஜாமிஆ நளீமியாவின் பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எச்.அகார் முஹம்மத், சிறப்புப் பேச்சாளராக கலந்துகொண்ட தென் கிழக்குக் பல்கலைக்கழகத்தின் அரபு, இஸ்லாமிய துறை பீடாதிபதி கலாநிதி அஷ்ஷெய்க் எஸ்.எம். எம்.மஸாஹிர் நளீமி ஆகியோர் உரையாற்றுவதையும், கலந்துகொண்டோரில் ஒரு பிரிவினரையும் படங்களில் காணலாம்.

வாசகர் கடிதம்

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் குப்பை கூளங்கள்

மலையகத்தில் காணப்படுகின்ற நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீர் வழங்கும் பிரதான நீர்த்தேக்கங்களில் ஒன்றான காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இனந்தெரியாதவர்களால் கடந்த சில நாட்களாக இரவு வேளையில் நகரங்களில் சேர்க்கப்படும் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் சமர்வெவி பகுதியில் கொட்டப்பட்ட குப்பைகள் நீரில் கலந்துள்ளதனால் நீர்வாழ் உயிரினங்கள் இறக்கும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளன. அத்தோடு பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்ட பாரமான குப்பைகள் இதனுள் காணப்படும் நீர்த்தேக்கத்தில் சகதியினுள் புதைவுண்டு வெடிப்பேற்பட்டால் நீர்தேக்கத்தின் அணைக்கட்டு உடைபட்டு பாரிய ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது கொட்டப்பட்டுள்ள குப்பைகளில் பிளாஸ்டிக் போத்தல்கள், கேன்கள், போன்றன நீர்த்தேக்கத்தின் பல இடங்களில் நிறைந்து காணப்படுகின்றன. இக்குப்பைகள் காரணமாக இங்குள்ள நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவ குடும்பங்களும் பாதிப்புக்குள்ளாகும் நிலை உருவாகி வருவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இக்குப்பைகள் காரணமாக எதிர்காலத்தில் நீர் மின் உற்பத்தி பாதிக்கும் நிலைக்கும் தள்ளப்படும் நிலை உருவாகுமெனவும் இக்குப்பை கொட்டுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பொது மக்கள் சுட்டிகாட்டுகின்றனர்.

எனவே உடனடியாக குப்பைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஹட்டன் க.கிஷோந்தன்)

பள்ளிவாசல் கட்டுமானப் பணிக்கு உதவுவோம்

சுமார் 300 வருடம் பழைமை வாய்ந்த இறக்காமம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் மின் கட்டுமானப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. புனித ரமழானில் இதற்கும் உதவி சதகதுன் ஜாரியா (நிரந்தர தர்மம்) வுக்கான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதோடு மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களோடு தொடர்பு கொள்ளலாம்.

மக்கள் வங்கி
இறக்காமம் கிளை
கணக்கு இலக்கம்:-015 100100035354

தொடர்புகளுக்கு-
0776758138 / 0777367309 -

(இறக்காமம் நிருபர்)

கல்முனையில் போக்குவரத்து விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதில்லை

கல்முனையில் வீதி ஒழுங்குகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை என பொதுமக்களும் பாதை சாரிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வொழுங்குகள் சரியாகப்பேணப்படாமையினால் அண்மைக்காலங்களில் சாலை விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுவதாகவும் பொது மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே வீதி ஒழுங்குகளையும் வீதி போக்குவரத்து விதிமுறைகளையும் கடுமையாகக் கடைபிடித்து வாகனங்களைச் செலுத்துமாறு வாகன சாரதிகளிடம் கல்முனை வாழ் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரதி செவ்வாய்க்கிழமை நாட்களிலும் வாசகர் கடிதம் பிரசுரமாகும். உங்கள் பிரச்சினைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.
வாசகர் கடிதம்
நவமணி
156, ஆஸ்பத்திரி வீதி,
தெஹிவளை.

பொருளாதார நிலைமைகள் தொடர்பான விசேட மாநாடு

நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பான விடயங்களை கண்டறியும் விசேட மாநாடு எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இரு நாட்களுக்கு இம்மாநாடு நடைபெறும். இந்த மாநாட்டில் இலங்கை மத்திய வங்கி, திறைசேரி, இலங்கை வர்த்தக சபை போன்ற பல நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். அறிவு, முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் ஆகியன ஒன்றிணைந்து இதனை ஏற்பாடுசெய்துள்ளன.

சிறுமிகளை பாலியல் துன்புறுத்திய 6 நபர்களும் பிணையில் விடுதலை

(ஏ.எல்.எம்.தாஜீல்)

திருகோணமலை மல்லிகைத்தீவு 3 மாணவிகளையும் பாலியல் துன்புறுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 6 சந்தேகநபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்றையதினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 6 சந்தேக நபர்களையும் மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது தலா 50 ஆயிரம் ரூபா வீதம் சரீரப் பிணையில் செல்லுமாறும், மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை மூதூர் பொலிஸ் நிலையத்தில் 6 பேரும் கையொப்பமிடுமாறும், மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.ஏ.றிஸ்வான் உத்தரவிட்டார்.

இதேவேளை இவ்வழக்கினை விசேட புலனாய்வு பிரிவுக்கு மாற்றுமாறு நீதிவான் மூதூர் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதோடு தொடர்ந்து இவ் வழக்கு தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்ட மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லிகைத்தீவு பெருவெளி தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 3 சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாக சொல்லப்படுகின்ற சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் குறித்த அறுவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும், தொடர்ந்தும் குறித்த குழந்தைகளுக்கு நீதி வேண்டி திருமலை உள்ளிட்ட பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு, அடையாள அணிவகுப்பில் குறித்த குழந்தைகள் மூவரும் சந்தேகநபர்களை அடையாளம் காட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ.ரி.என் புதுக்கட்டடம் ஜனாதிபதி திறந்துவைப்பார்

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைமையகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஐந்து மாடிக் கட்டடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை காலை திறந்து வைப்பார். ஐ.ரி.என்.தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் சமன் அதாவுத ஹெட்டி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நிதி ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவும் கலந்துகொள்வார்.

வெள்ளிப்பதக்கம் வென்ற முர்சிதா செரீன்

ஹைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 135ஆவது அகவையை முன்னிட்டு நடைபெற்ற இஸ்லாமிய தின கட்டுரைப் போட்டியின் பரிசளிப்பு விழா அஸ்மையில் டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

கட்டுரைப் போட்டியில் முர்சிதா செரீன் இரண்டாம் இடத்தைப் பெற்று கல்லூரியின் முன்னாள் அதிபர் நிஹானா மர்சூக்கிடமிருந்து வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் பெறுவதனைப் படத்தில் காணலாம்.

இவர்,மருதமுனையை பிறப்பிடமாகவும் தற்போது தெமட்டகொடையை வசிப்பிடமாகவும் கொண்ட அமின். எம் முஸ்தபா - ஜெஸ்மின் சியானி றசீத் தம்பதியரின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

(தகவல்: ஸஸ்.எல். நௌஸாத் மௌலானா)

உணவு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள மக்களிடம் கருத்து

நாட்டின் நடைமுறையிலுள்ள உணவு சட்டத்திருத்தத்திருத்தினை மேற்கொள்ள பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுகொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இது தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த கருத்துக்களை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி முன்னதாக சுகாதார அமைச்சுக்கு தெரியப்படுத்தலாம்.

அத்தோடு, foodcon trol@outlook. com என்ற இணையத்தள முகவரியூடாகவும் கருத்துக்களை தெரியப்படுத்த முடியும் என்றும் உணவு கட்டுப்பாட்டு நிர்வாகம் தெரிவித்துள்ளது. தற்போதைய காலகட்டத்தில் 1980 ஆம் இலக்க 26 இன் உணவு சட்டமே நாட்டில் நடைமுறையிலுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோர் தொடர்பில் தெரியப்படுத்தவும்

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோர் தொடர்பான தகவல்களை வழங்குமாறு தேசிய சிறுவர் அதிகார சபை பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கை சிறுவர் தொலைபேசி சேவைக்கு அல்லது அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இது தொடர்பான தகவல்களை வழங்க முடியும் என்றும், இலங்கை சிறுவர் தொலைபேசி இலக்கமான 1919 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கும் தெரியப்படுத்தலாம்.

சிறுவர்களை தொழில்களில் ஈடுபடுத்தும் நபர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

சாதாரணதரப் பரீட்சை விண்ணப்பம் ஏற்றல் 15 இல் நிறைவு

2017ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணி எதிர்வரும் வியாழக்கிமையுடன் (15) நிறைவடைவதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை மாணவர்கள் அதிபர்கள் மூலமாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி நிறைவடையவிருந்த இந்த விண்ணப்பம் ஏற்றுகொள்ளல், ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இந்த மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறைக்கைதி தப்பியோட்டம்

நீர்கொழும்பில் சம்பவம்

(நீர்கொழும்பு இன்மதுல் றஹுமான்)

நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறைக்கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டிருந்த சிறைக்கைதியே நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த சிறைக்கைதியின் காயத்திற்கு சிகிச்சையளிப்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அனுமதிக்கப்பட்ட சில மணிநேரங்களில் அவர் தப்பிச்சென்றுள்ளார். இவருக்கு எதிராக கொள்ளைச் சம்பவம் தொடர்பான 8 வழக்குகள் உள்ளதாகவும், உடுகம்பொல, வல்பொல பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவருகின்றது.

இது குறித்த மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளதோடு, இதற்கு முன்பும் நீர்கொழும்பு சிறைச்சாலையின் தாப்பையை உடைத்துக்கொண்டு 4 சிறைக்கைதிகள் தப்பி ஓடியமை குறிப்பிடத்தக்கது.

கொள்ளுப்பிட்டியில் செல்பி எடுக்க சென்ற சிறுவனின் தலை கண்டுபிடிப்பு

கொள்ளுப்பிட்டிய கடற்கரை பிரதேசத்தில் செல்பி எடுக்க முற்பட்ட சந்தர்ப்பத்தில் உயிரிழந்த சிறுவனின் தலைப்பகுதி கம்பஹா பகுதியில் நேற்று கண்டெடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் புகையிரதத்தில் மோதி உயிரிழந்தனர்.

காலியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தில் நேற்றுமுன்தினம் மாலை இவர்கள் இருவரும் மோதியுள்ளனர். அநுராதபுரத்தைச் சேர்ந்த 24 வயதான மூத்த சகோதரரும், 12 வயதான இளைய சகோதரருமே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் உயிரிழந்த சிறுவனின் தலைப்பகுதியை கண்டுபிடிக்க முடியாது போனதுடன், குறித்த புகையிரதம் கம்பஹா புகையிரத நிலையத்தை சென்றடைந்த சந்தர்ப்பத்தில் பயணிகள் தலைப்பகுதியை அவதானித்து புகையிரத ஊழியர்களுக்கு அறிவித்துள்ளனர். புகையிரத மார்க்கத்தில் செல்பி எடுப்பதனால் விபத்துக்கள் அதிகம் என திணைக்களம் சுட்டிக்காட்டியது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் செல்பி எடுக்க சென்று புகையிரதத்தில் மோதி 20 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக புகையிரத திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரியங்கர ஜயரத்னவுக்கு அழைப்பாணை

முன்னாள் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளர் ஆகியோருக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே இவ் வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பொது விமான போக்குவரத்து சேவை அதிகாரசபையை உருவாக்காமல் பதவிக்காக தமக்கு தனிப்பட்ட செயலாளரை நியமித்து வேதனம் வழங்கி வந்தமை மற்றும் பொது விமான சேவைகள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் வழமை மோசடி மேற்கொண்டமை உள்விட்ட 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் முன்னாள் அமைச்சருக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யானை தாக்கி பிக்கு மரணம்

(நீர்கொழும்பு இன்மதுல் றஹுமான்)

பெரஹராவில் சென்ற பௌத்த பிக்குவை யானை தாக்கி மரணமடைந்த சம்பவம் கட்டான பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கட்டான நிவர்தனாராம விஹாரையின் வருடாந்த பொசன் பெரஹரா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இரவு பெரஹரா வீதி வலம் வருகையில் யானைக்கு முன்னால் வலது பக்கமாக பௌத்த பிக்கு முன்னோக்கி நடந்து சென்றுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் மதம் கொண்ட யானை பௌத்த பிக்குவை தும்பிக்கையால் தாக்கி தனது முன்பக்க காலால் மிதித்துள்ளது. இதனைக் கண்ட யானைப் பாகன் மதகுருவை காப்பாற்றி நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது அவர் மரணமடைந்தார்.

25 வயதுடைய பி.லாஹல் ஹிமி என்ற பிக்குவே உயிரிழந்துள்ளதோடு, இவர் கனிஷ்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார்.

சவூதியில் வீட்டு பணிப்பெண்ணுக்கு 15 வருடங்களுக்கு பின் சம்பளம்

15 வருடங்களாக சம்பளம் பெறாமல் சவூதி அரேபியா

வில் பணிப்பெண்ணாக தொழில் புரிந்து வந்துள்ள இலங்கை யுவதிக்கு 4,936,000 ரூபா சம்பளமாக கிடைக்கப்பெற்றுள்ளது. இலங்கை பணிப்பெண்கள் வரலாற்றில் கிடைக்கப்பெற்ற கூடுதலான சம்பளம் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிமனை தெரிவித்தது.

2000 ஆம் ஆண்டு தனது 14 ஆவது வயதில் பொய்யான தகவல்களை வழங்கி குறித்த பெண் சவூதி சென்றுள்ளதோடு, அங்கு 15 வருடகாலமாக சம்பளம் பெறாமல் வீட்டுப்பணிப்பெண்ணாக இருந்துவந்துள்ளார்.

வீட்டு உரிமையாளருக்கு எதிராக குறித்த பெண் சவூதி அரேபிய அரசின் சட்டத்திற்கு அமைய நடவடிக்கைகளை எடுத்தமையாலேயே சம்பளம் கிடைத்துள்ளது.



NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
13th JUNE 2017 - TUESDAY

எரியூட்டப்பட்ட முஸ்லிம் வர்த்தக நிலையங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா?

கடந்த சில மாதங்களாக இனவாத நோக்கில் பள்ளிவாசல்களும் வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டு வரப்படுகின்றன.

சிங்கள – தமிழ் புத்தாண்டு முதல் கொடப்பட்டி முதல் மனுபியங்கனை வரை பள்ளிவாசல்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் 40 வரை சேதத்துக் குள்ளாக்கப்பட்டுள்ளன.

இதில் மூன்று பள்ளிவாசல்களும் ஏனையவை வர்த்தக நிலையங்களுமாகும்.

இவ்வாறு சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுவது அவசியமாகும்.

முஸ்லிம்களது வர்த்தகத்தை முடக்கும் நோக்கில் நாளுக்கு ஒன்றாக இடம்பெற்றுவந்த வர்த்தக நிலையங்களுக்கு தீ வைப்பதில் சம்பந்தப்பட்டவர்களைத் தேடி சட்டத்தின் முன் நிறுத்துவதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், இது தொடர்பாக அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது பிரதமரிடம் கேள்வி கேட்பதற்கும் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இதேநேரம் அம்பாறைமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் எரிக்கப்பட்ட முஸ்லிம் சொத்துக்களுக்கு உடன் இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

எரிக்கப்பட்ட வர்த்தக நிலையக் கட்டடங்களில் பல முஸ்லிமல்லாதவர்களது சொத்துக்களாகும். வாடகைக்குப் பெறப்பட்ட இந்த வர்த்தக நிலையங்களை மீண்டும் இயக்குவதற்கு கட்டடங்களை வழங்க மறுப்பது பற்றிய தகவல்களும் வெளியாகியுள்ளன.

இது உண்மையிலே மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்ற நிலையாகும்.

இப்படிப்பட்டவர்களது விடயத்திலும் அரசு தலையிட்டு ஏற்கனவே செய்துள்ள ஒப்பந்தங்களின்படி கடைகளை நடாத்துவதற்கு உதவவேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று தீயூட்டும் வர்த்தக நிலையங்களை இருந்தவாறே சீர் செய்வதன் மூலம் எரியூட்டுபவர்களது எண்ணம் தவிடுபொடியாகும்.

கடந்த அரசாங்க காலத்தில் அளுத்கம கலவரம் இடம்பெற்றது. அக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளும் வர்த்தக நிலையங்களும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டதனை மறந்து விட முடியாது.

எனவே முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை மீள அமைத்து, தொடர்ந்து செயற்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

புதிய அரசியல் யாப்பில் முதற்கட்ட பிரேரணைகள்

- பிரதமரை தெரிவதற்கு 3 மாற்று முறைகள்
- 55 பேரைக்கொண்ட செனட் சபை
- பாரா. உறுப்பினர்களின் எண்ணிக்கை 233
- கலப்பு தேர்தல் முறை

நாட்டில் அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பு மாற்றங்கள் தொடர்பான நகல் யாப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. இந்த யாப்பில் பிரதமரை தெரிவு செய்வதற்காக 3 மாற்று முறைகள் 55 அங்கத்தவர்களை கொண்ட 2 ஆம் சபையொன்று, 233 பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவுசெய்ய புதிய தேர்தல்முறை என்பன பிரேரிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான வழிகாட்டல் குழு கடந்த 1 வருடத்திற்கு மேலாக இடம்பெற்ற கலந்துரையாடல்களையடுத்து பொதுவான ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள விடயங்களே மேற்குறிப்பிட்டவையாகும்.

பிரதமர் ஒருவரை நேரடியாக தெரிவுசெய்தல், பிரதமருக்கு முன்பு பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரை நியமித்தல் மற்றும் இதுதொடர்பாக தற்போது இருக்கின்ற முறையை தொடர்வது என்ற 2 பிரேரணைகளும் நகல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

தேர்தலை மையமாகக்கொண்டு பிரதமரை தெரிவுசெய்வது தொடர்பாக அரசியல் அமைப்பு சபையில் கூடுதலான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்தல் ஒன்றின் போது பிரதமர் பதவிக்கு எவரையும் பிரேரித்தல் அல்லது எந்தவொரு தேர்தல் கட்சிக்கும் வேறொரு கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து பிரதமராக பிரேரித்தல் அல்லது பிரதமராக ஒருவரது பெயரை பிரேரிக்காதிருத்தல் போன்ற சரத்துக்களை உள்ளடக்கி புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பு சபையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் 9 பிரிவுகள் தொடர்பாக மீண்டும் பேசுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அதில், அரசின் தன்மை தொடர்பாக தற்போதைய யாப்பில் உள்ள முதல் பந்தி, இறைமை மற்றும் மதம், காணி தொடர்பான சிந்தாந்தங்களை பன்முகப்படுத்தல், மாகாணப்பட்டியல் விடயங்கள் தொடர்பாக அரசமைப்பு செயற்படும் முறை, தலைநகரில் பூமி பிரதேசங்கள், இரண்டாம் சபை, தேர்தல் முறை, நிர்வாக அதிகாரம், அரசியல் அமைப்பு சபை மற்றும் சட்டமும் சமாதானமும் என்பனவே இந்த 9 பிரிவுகள் ஆகும்.

நிர்வாகம் அதிகாரமிகு ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு புது இணக்கப்பாடொன்று ஏற்பட்டுள்ளதோடு, குறிப்பிட்ட காலத்திற்குள் ஜனாதிபதி ஒருவரை பாராளுமன்றம் தெரிவுசெய்ய வேண்டும் என்ற பிரேரணையும் அதில் உள்ளடங்கியுள்ளது.

2 ஆம் சபையை அமைப்பது தொடர்பாக பிரேரணையொன்றும் இதில் அடங்கியிருக்கின்றது. 2 ஆம் சபை 55 அங்கத்தவர்களை கொண்டவர்களாக இருக்கவேண்டும். தொகுதிவாக்கு முறையில் மாகாணசபைகளில் இருந்த 45 பேரும் பாராளுமன்றத்திலிருந்து 10 பேரும் இச்சபைக்கு உள்ளடக்கப்படுவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மக்கள் சேவை மற்றும் தமது தொழிற்றுறையில் கீர்த்தி பெற்ற திறமைமிக்கவர்களாக இருக்கவேண்டும்.

இந்த நகல் யாப்பில் கலப்பு தேர்தல் முறை பிரேரிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் விகிதாசார அடிப்படை, நேரடி தெரிவு முறைகள், தேர்தல் தொகுதிகளை பாதுகாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூடுதலான தொகுதிகளை வென்றெடுக்கும் கட்சிக்கு குறிப்பிட்ட போனஸ் தொகுதிகளை வழங்குவது தொடர்பாகவும் இற்றைப்படுத்தப்பட்டுள்ள அரசியல் யாப்பும் பிரேரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் முழு தொகுதிகளின் எண்ணிக்கை 233 ஆக இருக்கவேண்டும் என்றும், அதில் 60 சதவீதம் அதாவது 140 தொகுதிகளுக்கு தொகுதிவாரி தேர்தல் முறையில் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும் என்றும், எஞ்சியுள்ள 40 சதவீதத்துக்கு 93 தொகுதிகளுக்கு இறுதி முடிவுகளின் விகிதாசாரமுறையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பிரேரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள விகிதாசாரத்துக்கு நஷ்டஈடாக வடமாகாணத்திற்கு மேலதிகமான தொகுதிகளை குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. உத்தேசித்த தேர்தலின் கீழ் சகல வாக்காளர்களுக்கும் ஒருவாக்கு கலப்பு தேர்தல் முறையின் கீழ் தெரிவுசெய்யப்படும் அபேட்சகருக்கும் ஏனைய அடுத்த வாக்கு கட்சிக்கு வழங்குவதற்கும் வாக்காளருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

சமய தூதுவர்களை அவமானப்படுத்துவதை தடுக்க கடும் சட்டம் தேவை

நாட்டில் தற்போது உருவாகியிருக்கின்ற சமய முரண்பாடுகள் தொடர்பாக லங்காதீப தினசரி நேற்று வெளியிட்டிருந்த ஆசிரியர் தலையங்கத்தை காலத்தின் தேவை கருதி இங்கே தருகின்றோம்.

74 சதவீதமான சிங்கள பௌத்தர்கள் வாழும் நாட்டின் பிரஜைகளாக தமிழ் இந்துக்கள், முஸ்லிம் இஸ்லாமியர்கள் சனத்தொகையில் அடுத்த அங்கத்தவர்களாவார்கள். சிங்கள கத்தோலிக்க, கிறிஸ்தவ மற்றும் சமயங்களை பின்பற்றுகின்ற பல இனத்தவர்களும் பறங்கியர், மலாய பரம்பரையைச் சேர்ந்த மக்களும் எமது நாட்டின் சனத்தொகையில் பங்காளர்களாவார்கள். சிங்கள பௌத்தர்களை பெரும்பான்மையாக கொண்ட பல்வேறு சமய மற்றும் இனங்களை கொண்ட நாட்டில் நாம் எல்லோரும் கௌரவத்துடன் வாழும் பாக்கியத்தை பெற்றுள்ளோம்.

இனம், மதம் தொடர்பான கௌரவத்தை பேணி அபிமானத்தை பாதுகாத்து வாழ்வதே இலங்கை பிரஜைகளான எங்கள் எல்லோரதும் உரிமையாகும். அந்த உரிமைகளை பறித்துக்கொள்வதற்கோ அல்லது அவற்றிற்கு சவால் விடவோ எவருக்கும் உரிமை இல்லை. எந்த மதத்தை அவமதிப்பதற்கோ, கேலிக்குள்ளாக்குவதற்கோ மதங்களின் தூதுவர்களை ஏசுவதோ, கொச்சைப்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு உரிமை இல்லை. நாட்டின் பெரும்பான்மையினரான சிங்கள பௌத்த மக்கள் இந்த நாட்டின் ஏனைய சகல மதங்கள், இனங்கள் குறித்து அன்புடனும், கருணையுடன் செயற்படுவதோடு, ஏனைய மதத்தவர்களும் சிங்கள பௌத்தர்கள் குறித்து அதேபோன்று கௌரவமாக செயற்படுவது அவசியமாகும். அவ்வாறு இடம்பெறாத போது, நாட்டில் இருக்கவேண்டிய சமாதான சௌஜன்யத்துக்கு பாதிப்பே ஏற்படும்.

அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு பதிலாக அவநம்பிக்கை விரக்தி என்பனவே முழு நாட்டையும் சூழ்ந்துகொள்ளும். அவ்வாறான நிலைமை நாம் கடந்த 30 வருடங்களாக அனுபவித்துள்ளோம்.

நாட்டின் சமாதான சூழலை கட்டியெழுப்புவதில் முழு சமூகத்துக்கும் பாரிய பொறுப்புள்ளது. தேசிய மற்றும் சமய சௌஜன்யத்தை பேணுவது ஒரு பிரிவினரின் பொறுப்பல்ல. அது சமூகத்தின் பெரும்பான்மை, சிறுபான்மை எந்த பிரிவினருக்கும் கைவிடமுடியாத பொறுப்பாகும். எனினும் எங்கள் மத்தியிலேயே இருக்கும் சில குழுக்கள் மற்றும் அமைப்புக்கள் வேண்டுமென்றே நாட்டுக்குள்ளே சமயங்களுக்கிடையே அதிருப்தியை உருவாக்கி சமய மோதல் ஒன்றை உருவாக்குவதற்காக முயற்சிப்பதனை கடந்த காலத்தில் எங்களால் காணமுடிந்தது. திடீரென நாட்டில் பெய்த பெரும் மழை அனர்த்தம் காரணமாக இந்த நிகழ்வுகள் அடிபட்டதோடு, எந்த நேரத்திலும் மீண்டும் அது தலைதூக்கலாம். அதனை தவிர்ப்பது சகல இன, மத தலைவர்களதும் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். தீவிரவாத சந்தர்ப்பவாத குழுக்களின் தேவைகளுக்கு நிகழ்ச்சி நிரலுக்கு எமது நாடு பலியாகக் கூடாது.

சமூக வலுவூட்டல் நலன் புரி மற்றும் மலைநாட்டு பாரம்பரிய அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க பெரமடுல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் புதிய விஞ்ஞான ஆய்வுகூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் அங்குள்ள மாணவர்களை விழித்து பேசும் போது இந்த நிகழ்வுகள் பற்றி குறிப்பிட்டிருந்தார். இனவாதம், மதவாதத்தை உருவாக்க முற்படும் பௌத்த மதகுரு ஒருவரோ, ஏனைய மதக்குருக்களோ இருப்பதாக இருந்தால் அவர்களுக்கு பலத்த தண்டனை விதிக்கப்படவேண்டும் என தெரிவித்திருந்தார். அவர் மாணவர்களிடம் கேட்டிருப்பது ஒருநாளும் இனவாத அல்லது மதவாதியாக இருக்காது சகல இனங்களையும் மதங்களையும் உயர்வாக மதிக்கும் பிரஜையாக மாறவேண்டும். இது இந்த நாட்டில் சகல இன மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முழு மாணவ சமுதாயத்திற்கும் செய்யப்பட்ட பெறுமதி மிக புத்திமதியாகும்.

இங்கு மிக முக்கியமாக கவனமெடுக்கவேண்டிய பக்கம் இருக்கின்றது. இனவாத, மதவாத விசமாச் சாரக்கருத்துக்களை பரப்புகின்றவர்களை, சமய தூதுவர்களை ஏசுதல் அகௌரவப்படுத்தல் போன்றவற்றுக்கு இணைய தளங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. சமூக இணைய தளங்களை பயன்படுத்தும் சகலரும் இவ்வாறான கருத்துக்களை முழுமையாக ஏற்றுகொள்வார்கள். எனினும், சிலர் இந்த கருத்துக்களை மேலும் பரப்புவதிலும் அவற்றிற்கு ஆதரவு தெரிவிப்பதற்கும் வாய்ப்பளிப்பதனை மறந்து விடக்கூடாது நாசகார வேலைகளுக்காக சமூக இணைய தளங்களை பயன்படுத்துவோர் முழு நாட்டையும் தீ பற்ற வைக்கும் துஷ்ட நோக்கங்களிலிருந்து செயற்படுவது மிக தெளிவானது.

இந்த அழிவுக்கு முற்றுப்புள்ளி வைப்பது சமூகத்தின் பொறுப்பாகும். 30 வருட இன யுத்தத்தின் பின்பு நாடு கஷ்டத்துக்கு மத்தியில் நல்லிணக்க வழியை தேடி வரும் போது அதனை இடைவழியில் சீர்குலைத்து மீண்டும் இனவாத மதவாத மோதலை ஏற்படுத்த முயற்சிக்கும் யாராவது இருந்தால் அவர்கள் அதனை செய்வது நாட்டுக்கும் அல்லது மதத்திற்கும் இருக்கும் பற்றினால் அன்றி அல்லது அன்பினால் அன்றி நாட்டை அழிக்கும் நோக்கத்தினால் என்பதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறான வேலைகளில் ஆதரவு வழங்காமல் இருப்பது நாட்டின் சகல பிரஜைகளின் பொறுப்பாகும்.

சமய தூதர்களுக்கு ஏசுவதால் அல்லது ஏனைய மத நம்பிக்கைகளை மற்றும் வணக்க வழிபாடுகளை தூசிப்பதால் எவரும் பிரயோசனம் பெறமுடியாது. அவ்வாறான செயற்பாடுகள் அணைந்துள்ள நெருப்புக்கு மீண்டும் வைக்கோலை பற்ற வைப்பது போன்றாகும். மீண்டும் தீப்பற்றுவதற்கு தேவைப்படுவது ஒரு நெருப்புக்குச்சி மட்டும் என்பதை நினைவில் வைத்து செயற்படுவது நாட்டின் சகல பிரஜைகளின் பொறுப்பாகும். இருப்பது வெடி உற்பத்தி பண்டகசாலை ஆயின், இறைவனின் பெயரால் மெழுகுவர்த்தியை பற்றவைப்பதும் பயங்கரமானது.

இனவாதத் தீயை அணைக்க புரவசிபலய, ஷூரா கவுன்சில் இணைந்து செயற்படத் தீர்மானம்

இனங்களுக்கிடையே முறுகல்களை ஏற்படுத்தி முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்கள் மற்றும் பொருளாதார நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் தொடர்பாக தேசிய ஷூரா சபை புரவசிபலய பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. தேசிய ஷூரா சபையின் தலைவர் தாரிக் மஹ்மூத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைப்புகளின் தலைவர்களான சிரேஷ்ட ஊடகவியலாளர் காமினி வியங்கொட மற்றும் பேராசிரியர் சரத் விஜேசூரிய ஆகியோருடன் கலாநிதி விக்ரமபாஹு கருணாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கலாநிதி ஜயதிலக்க டீ சில்வா மற்றும் பெரும்பான்மை சமூகத்தின் முன்னணி ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர். தேசிய ஷூரா சபையின் சார்பில் அதன் நிறைவேற்றுக்குழு மற்றும் செயலக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இனங்களுக்கிடையே முறுகல்களை ஏற்படுத்தி, முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்கள், பொருளாதார நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களுக்கு எதிராக இரு சமூகங்களின் புத்திஜீவிகள் இணைந்து பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இனவாத செயற்பாடுகளைக் கண்டித்து ஊடகவியலாளர் மகாநாடு ஒன்றை நடாத்தல் பெரும்பான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள், சமூக ஆர்வலர்களின் கையொப்பங்கள் பெறப்பட்டு 20/06/2017 அன்று லங்காதீப பத்திரிகையிலும் 22/06/2017 அன்று திவயின, ரிவிர, மவ்பிம ஆகிய பத்திரிகைகளிலும் இனவாதத்திற்கு எதிரான முழுப்பக்க விளம்பர அனுபந்தம் ஒன்றைப் பிரசுரித்தல் அத்துடன் ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர், ஊடக அமைச்சர் ஆகியோரையும் இக்குழு இணைந்து சந்திக்கவுள்ளது.

மேலும், இனங்களுக்கு இடையில் முறுகல்களை ஏற்படுத்தி, நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் இனவாத, மதவாத சக்திகள் மேற்கொண்டுவரும் பொய் பிரசாரங்களை முறியடித்து சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் உண்மையான தகவல்கள் சென்றடைவதை உறுதி செய்வதற்குமான ஒழுங்குபடுத்தப்பட்ட ஊடகப் பிரசாரம் ஒன்று கட்டாக ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பாறை ஊடகவியலாளர் பேரவையின் இப்தார் நிகழ்வு

(றிசாத் ஏ காதர், சம்சுதீன் அருள், காலிதீன்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் பேரவையின் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் பேரவையின் தலைவர் கலாபூஷணம் எம்.ஏ. பகுர்தீன் தலைமையில் அக்கரைப்பற்று ஆசியன் ஷெப் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும், அமைச்சருமான றிஷாத் பதியுதீன், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. கோடீஸ்வரன், தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லா, முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத், கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெவ்வை, தெற்கு அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஏ.எல். எம். சலீம், பிரதேச செயலாளர்கள், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உட்பட, கல்வியியலாளர்கள் அரசியல் பிரமுகர்கள், பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்கள் மற்றும் உலமாக்கள் புத்திஜீவிகள் என ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் பேரவையின் இந்நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக அஷ்ஷெய்க் கலாமுல்லா (றஷாதி) கலந்து கொண்டு மார்க்க சொற்பொழிவாற்றினார். இதன்போது, பேரவையின் ஆலோசகராகவிருந்து கடந்த வாரம் காலமான மூத்த ஊடகவியலாளர் எம்.ஐ.எம். முஸ்தபாவுக்கு (ஓய்வு பெற்ற விரிவுரையாளர்) விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

கொம்பனித்தெரு இஸ்லாமிய கல்வி நிலையம் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது கல்வி நிலையத்தின் உப அதிபர் எம்.ஏ. அஸார் அதிபர் ஏ.ஆர்.எம். சப்ரின் ஆகியோர் உரையாற்றுவதையும் வேகந்தை ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் துவா ஓதுவதையும் மேடையில் முன்னிலை வகித்த சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முன்னாள் பணிப்பாளர் ஹாசிம் உமர், பொரளை அஹ்மதியாவின் அதிபர் ஷிப்லி ஹாசிம், கலைச்செல்வன் எம்.எம். ரஷூப், ஏ.எல்.எம். அன்வர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் இப்தாரில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

நிந்தவூரில் விசேட சன்மார்க்க சொற்பொழிவும், இப்தார் நிகழ்வும்

(ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ்)

நிந்தவூர் ஜாமிஉத் தௌஹீத் ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாட்டிலான விசேட சன்மார்க்க சொற்பொழிவும், இப்தார் நிகழ்வும் நேற்றுமுன்தினம் நிந்தவூர் அல்-மஸ்ஹூர் பெண்கள் உயர்தரக் கல்லூரியில் இடம் பெற்றது.

அஷ்ஷெய்க் எம்.எச்.எம். இத்ரீஸ் மௌலவி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் தாருல் ஹுதா அரபு, இஸ்லாமிய மகளிர் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி அஷ்ஷெய்க் எம்.எஸ்.முபாறக் மதனி விசேட அதிதியாகக் கலந்து கொண்டு, இலக்கை நோக்கிய பயணம் எனும் கருப் பொருளில் விசேட சொற்பொழிவும் நிகழ்த்தினார்.

அஷ்ஷெய்க் எம்.எஸ்.முபாறக் மதனி இங்கு கருத்துத் தெரிவிக்கையில், அல்குர்ஆனையும், சுன்னாவையும், எவ்வாறு சஹாபாக்கள் விளங்கிக் கொண்டு செயற்பட்டார்களோ.. அவ்வாறு நாமும் செயற்பட்டு, உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும். அதற்காகவே நாம் உண்மையாகப் பாடுபடுகிறோம் எனத் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்வில் சங்கைக்குரிய உலமாக்கள், கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், ஊர் தலைவந்தர்கள், நலன்விரும்பிகள், சமூக சேவை அமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புதிய செயலாளராக ஏ.பீ. ஐஃபர் தெரிவு

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் அபிவிருத்திச் சங்க புதிய செயலாளராக தேசமான்ய ஏ.பீ. ஐஃபர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி மாலை நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க புதிய செயலாளராக பெரும் பான்மை வாக்குகளின் அடிப்படையில் தேசமான்ய ஏ. பீ. ஐஃபர் தெரிவு செய்யப்பட்டார். எதிர்வரும் காலங்களில் பாடசாலை அபிவிருத்திக்கு தன்னால் இயலுமான அத்தனை செயற்பாடுகளையும் முன்னெடுக்கப் போவதாக ஏ.பீ. ஐஃபர் இதன் போது குறிப்பிட்டார்.

விலைமனு அறிவித்தல்
Lanka Mineral Sands Limited
(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

பெறுமதிமிக்க கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்
கேள்வி இல: LMS/MKT/TDR/17/10

இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, அமைச்சின் கேள்விமனு சபை தலைவர், பின்வரும் கனரக கனிம மணல் பொருட்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களைக் கோருகிறார். வாங்குவதற்கு சாத்தியமுள்ளோர், அனைத்து கொள்ளளவுக்கும் கேள்விமனு வழங்க வேண்டும்.

	பொருள்	விற்கப்படும் அளவு	மனு பத்திரம்	கேள்வி மனு முடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம்
1	DRY ILMENITE (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATION PROVIDED)	3500 MT (பொதிகளில் வழங்கப்படுகிறது)	10,500,000.00 இலங்கை ரூபா அல்லது 70,000.00 அமெ. டொலர்	05.07.2017 பிற்பகல் 02 மணி

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பரிந்துரைக்கப்படும் கேள்விமனு படிவம் மற்றும் பொருளின் விபரங்கள், இலக்கம் 341/21, சரணமாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. அத்தோடு,ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்து கொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளரை பின்வரும் இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும். +94 11 2683951-2, +94 11 2683965 அல்லது சந்தைப்படுத்தல் பிரிவை தொடர்பு கொள்ளுங்கள் +94 11 2683954, தொலைநகல் +94 112682066, மின்னஞ்சல்: ilmenite@slt.lk

தவிசாளர்
அமைச்சின் கேள்விமனு சபை
இலங்கை கனிம மணல்கள் நிறுவனம்
341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை

விலைமனு அறிவித்தல்
Lanka Mineral Sands Limited
(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

புல்மோட்டை நிலையத்துக்கு ஈரமான அதி தீவிர காந்தப் பிரிப்பான் மற்றும் கட்டுப்பாட்டு பலகையை வழங்கி, விநியோகித்தல்

1. இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகை குழு தலைவர், தகுதிவாய்ந்த, தகுதிபெற்ற மனுதாரர்களிடமிருந்து பின்வரும் வகையில் மூடப்பட்ட கேள்விமனுக்களை கோருகிறார்.
2. தேசிய போட்டி செயல்முறை (NCB) மூலம் கேள்விமனு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இல.	மனு இல.	பொருளின் விபரம்	ஆவண கட்டணம் (மீளளிக்கப்படாது)	மனு மதிப்பு (ரூபா)	மனு மதிப்பு பின்வரும் திகதி வரை செல்லுபடி யாக இருக்க வேண்டும்	மனு செல்லுபடி யாகும் நாட்கள்	மனு திறக்கும் மற்றும் திகதியும் நேரமும்
01	LMSL/ SUP/DPC /17/2017	புல்மோட்டை நிலையத்துக்கு ஈரமான அதி தீவிர காந்தப் பிரிப்பான் மற்றும் கட்டுப்பாட்டு பலகையை வழங்கி, விநியோகித்தல்.	ரூபா.10,000	ரூ4000,000	17/10/2017	91	05/07/2017 14.30 மணி

3. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த மனுதாரர்கள், மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு, அதே இடத்தில் 12/06/2017 முதல் 04/07/2017 வரையிலும் எந்தவொரு வேலை நாட்களிலும் மனு ஆவணங்களை பரிசோதிக்கலாம்.
வழங்குதல் முகாமையாளர்,
இலங்கை கனிம மணல்கள் நிறுவனம்,
341/21, சரண மாவத்தை, இராஜகிரிய.
4. ஆர்வமுள்ள மனுதாரர், வழங்குதல் முகாமையாளருக்கு, 12/06/2017 முதல் 04/07/2017 வரையிலும் 9.00 மணி முதல் 15.00 மணி வரையில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம், மீளளிக்கப்படா கட்டணத்தை செலுத்துவதன் மூலம், ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனு ஆவணத்தை வாங்கலாம். இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் நிதிப் பிரிவின் காசாளரிடம், பணமாக கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
5. முழுமைப்படுத்தப்பட்ட மனுக்கள், அசல் தனியாகவும், நகல் தனியாகவும் உறையிலிடப்பட்டு, அவை மீளவும் ஒரு உறையிலிடப்பட்டு, மேலே குறிப்பிட்டப்பட்டுள்ளவாறு குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் மனுப் பெட்டியில் இடப்பட வேண்டும்.
6. மனுக்கள், மேலே விளக்கப்பட்டுள்ளவாறு, மனுதாரரின் அல்லது அவர்கள் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளுக்கு முன்னால் மனுக்கள் திறக்கப்படும்.
7. அனைத்து மனுக்களுக்கும் மனு பாதுகாப்பு தொகை இணைக்கப்பட வேண்டும். அவை கட்டாயமாக,
   - மனு ஆவணத்தின் 3 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள வகையில் இருக்க வேண்டும்.
   - இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரத்துக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
   - மனு திகதி படிவத்தின் 20.1 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முகவரால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

தலைவர்,
பெறுகை குழு திணைக்களம்

பத்ர் தரும் படிப்பினைகள்

இஸ்லாமிய எழுச்சியின் மைல் கல்லாகத் திகழ்ந்த தியாக நிகழ்ச்சியே பத்ர் போராகும். போதிய முன்னேற்பாடுகள் இல்லாத சுமார் 313 பேர்கள் 1000 பேர் கொண்ட யுத்த படையை களத்தில் எதிர்கொண்டு ஈமானிய பலத்தாலும், தியாக குணத்தாலும் அல்லாஹ்வின் உதவியைப் பெற்று சிறப்புடித்த நிகழ்ச்சி அதுவாகும். இந்த பத்ர் போர் வரலாற்றின் மூலம் நாங்கள் பல்வேறு படிப்பினைகளைப் பெறலாம்.

அபூ சுப்யான் மிகப் பெரும் வர்த்தகப் பொருட்களுடன் மதீனாவை அண்டிய பகுதியால் வருகின்றார் என்ற செய்தி நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைக்கின்றது. அந்த வியாபாரக் குழுவை மடக்கிப் பிடிப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் ஒரு கூட்டத்தை அழைத்துக்கொண்டு செல்கின்றார்கள். அபூ சுப்யான் உளவு பார்த்ததில் நபி(ஸல்) அவர்கள் தன்னைப் பிடிக்கக்கூடும் என்று அறிந்து மக்காவுக்கு செய்தி அனுப்புகின்றார். இதுதான் சந்தர்ப்பம் என நினைத்த மக்காவாசிகள் முஸ்லிம்களைப் பூண்டோடு அழிப்பதற்காகப் படை திரட்டி வருகின்றனர்.

பின்னர் அபூ சுப்யான் வேறு வழியாக மக்கா சென்றுவிட முஸ்லிம்கள் ஆயுதக்குழுவுடன் மோதும் நிலை ஏற்படுகின்றது. ஏற்றில் இந்தப் போரில் முஸ்லிம்கள் வெற்றி பெறுவதுடன் அபூ சுப்யான், அபூலஹப் போன்ற போரில் பங்கெடுக்காத குறைஷித் தலைவர்கள் போக மீதி முக்கியஸ்தர்கள் அனைவரும் பத்ரில் கொல்லப்பட்டு குறைஷிக் கூட்டம் வலுவிழக்கச் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் பெறவேண்டிய படிப்பினைகளை நோக்குவோம்.

அல்லாஹ்வின் கழாவை ஏற்றுக்கொள்ளல்

பத்ர் யுத்தம் அல்லாஹ்வின் கத்ரின் வல்லமையை மிகத்தெளிவாக உணர்த்தும் ஒரு நிகழ்ச்சியாகும். நபித்தோழர்கள் வியாபாரக் கோஷ்டியை இலக்குவைத்தனர். அல்லாஹ் அவர்கள் யுத்தக் குழுவுடன் மோத ஏற்பாடு செய்துவிட்டான். எனவே, இவர்கள் எத்தனை திட்டங்கள் போட்டாலும் அவர்களால் அல்லாஹ்வின் நாட்டத்தை மீறி வியாபாரக் குழுவைப் பிடிக்க முடியவில்லை.

(அபூ சுப்யான் தலைமையில் வரும் வியாபாரக் கூட்டம், அபூ ஜஹ்லின் தலை மையில் வரும் படையினர் ஆகிய) இரு கூட்டங்களில் (ஏதேனும்) ஒரு கூட்டத்தை (வெற்றி கொள்ளும் வாய்ப்பு) உங்களுக்கு உண்டு என்று, அல்லாஹ் வாக்களித்ததை நினைவு கூருங்கள். ஆயுத பாணிகளாக இல்லாத (வியாபாரக் கூட்டம் கிடைக்க வேண்டுமென) நீங்கள் விரும்பினீர்கள். (ஆனால்,) அல்லாஹ் தன் திருவாக்குகளால் சத்தியத்தை நிலை நாட்டவும், இறை மறுப்பாளர்களை வேரறுக்கவுமே நாடுகிறான். (8:7)

கலந்தாலோசித்தலின் அவசியம்

மார்க்க விவகாரங்களில் அறிஞர்களுடனும், உலக விவகாரங்களில் குறித்த துறையில் ஆற்றல் உள் ளவர்களிடமும் ஆலோசனை செய்வது அல்லாஹ்வின் உதவியும், முஸ்லிம்களின் உலகியல் விவகாரங்களில் நன்மை நடப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் முக்கிய அம்சமாகும்.

நபி(ஸல்) அவர்கள் போருக்கு முன்னர் நபித்தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். தாம் விரும்பும் முடிவை சில தோழர்கள் முன் வைத்தனர். அப்போது கூட அவர்கள் நேரடி முடிவு செய்யாது மதீனத்து தோழர்களின் முடிவை அறியும் ஆர்வத்தில் தொடர்ந்தும் ஆலோசனை செய்தார்கள். அவர்களின் ஆலோசனையும் சாதகமாக அமைந்த பின்னரே போர் செய்யும் முடிவை எடுத்தார்கள். இது ஆலோசனை செய்வதின் அவசியத்தை உணர்த்துகின்றது. நபியவர்கள் கய கௌரவம் பாராது அடுத்தவர் கருத்தையும் மதித்து நடந்ததால், முஸ்லிம்களுக்கு நன்மை விளைந்தது. இது கலந்தாலோசனை செய்வதன் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது.

எதிரிகள் குறித்த விழிப்புணர்வு

நபி(ஸல்) அவர்கள் மதீனாவில் இருக்கும் போதும் எதிரிகளின் நடமாட்டம் குறித்து புலனாய்வு செய்தார்கள். பத்ர் களம் வந்தபோதும் பலரை அனுப்பி புலனாய்வுத் தகவல்களைத் திரட்டினார்கள். ஒரு முறை அவர்களும் அபூபக்கர்(ஸல்) அவர்களும் சேர்ந்து, களத்தில் தகவல் அறியச் சென்றனர்.

மற்றொரு முறை அலி, சுபைர் இப்னுல் அவ்வாம், ஸஃத் இப்னு அபீவக்காஸ் ஆகிய நபித்தோழர்களை அனுப்பி அவர்கள் மூலம் குறைஷிகளுக்கு தண்ணீர் இறைக்கும் இளைஞர்களைக் கைதுசெய்து அவர்கள் மூலம் எதிரிகளின் எண்ணிக்கை, படைபலம், முக்கிய தளபதிகள் குறித்த தகவல்கள் என்பவற்றை அறிந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சி எதிரிகளின் செயல்திட்டங்கள், பலம், பலவீனம் மற்றிய அறிவின் அவசியத்தைத் உணர்த்துகின்றது. இந்த விழிப்புணர்வு முஸ்லிம்களிடம், அதிலும் குறிப்பாக சமூகத் தலைவர்களிடம் அவசியம் இருந்தாக வேண்டும்.

அல்லாஹ்வின் உதவியில் நம்பிக்கை வைத்தல்:

உலகியல் ரீதியில் முடிந்தவரை முயற்சி செய்யும் அதேவேளை ஆயுதத்திலோ, ஆள் பலத்திலோ நம்பிக்கை கொள்ளாமல் அல்லாஹ்வின் மூலமே உதவி கிடைக்கும் என்ற ஈமானிய பலத்தில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

நபித் தோழர்களிடம் போதிய யுத்த சாதனங்கள் இருக்கவில்லை. 70 ஒட்டகங்களும், 60 கேடயங்களும் சுபைர் இப்னுல் அவ்வாம்(ஸல்), மிக்தாத் இப்னு அஸ்வர் ஆகிய இருவரிடம் மட்டும் இரு குதிரைகளும் இருந்தன. (அல்-பிதாயா வன்னி ஹாயா) பௌதீக காரணிகளை வைத்து ஆராய்ந்தால் முஸ்லிம்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அறவே இல்லை என்று தான் கூற வேண்டும். ஆனால், இந்த சிறுகூட்டம் அந்தப் பெரும் கூட்டத்தை சிதறடித்தது.

எத்தனையோ சிறு கூட்டத்தார்கள், பெருங் கூட்டத்தாரை அல்லாஹ்வின் (அருள்மிக்க) அனுமதிகொண்டு வென்றிருக்கின்றார்கள்.

மேலும் அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான் என்று கூறினார்கள். (2:249)

கட்டுப்படுத்தலும் தூய பிராத்னையும் உதவியை பெற்றுத்தரும் போர் நிகழ முன்னரே நபி (ஸல்) அவர்கள் அதிகமதிகம் அழுதழுது அல்லாஹ்விடம் பிராத்தித்தார்கள். அல்லாஹ்வின் மீது பூரண நம்பிக்கை வைத்து, போரிட்டவர்களுக்கு அவன் மேலான வெற்றி வைக்கொடுத்தான்.

கொடைகளிற் சிறந்த கொடை

ஆயிரம் மாதங்களை விடச்
சிறந்த மாதம் எனும்
அருள் வாக்கு பொய்யாமோ...
இறை வாக்கு என்றுதான்
பொய்த்தது...
இந்தச் சிறப்பெல்லாம்
எதற்கோ அது ரமழானுக்கே...

புனித அல்குர்ஆன் பிறந்த மாதம்
பத்ருப் போர் நிகழ்ந்த மாதம்
லைலத்துல் கத்ரின் உதய மாதம்
ஸக்காத் கடமையைச்
சாற்றும் மாதம்!
இத்தகைய சிறப்பெல்லாம்- வேறு
எந்த மாதங்களில் இருக்கின்
றதோ...

வைத்தானும் பைசாசங்களும்
சிறைதன்னில்-
சங்கமிக்கும் மாதம்
சுவர்க்கத்தின் வாயிலெல்லாம்
திறந்து விடப்படும் மாதம்
தீமைகள் அகன்று- நன்மைகள்
திரள் திரளாய் குவியும் மாதம்
எந்த மாதத்துக்கோ இத்தனை
சிறப்புக்கள்?

அல்லாஹ் எமக்களித்த
அருள் மறை மாதத்தின்
எல்லாக் கிரியைகளையும்
ஏற்றமுடன் செய்வோம்!

நோன்பை நோற்போம்
தராவீஹ் தொழுவோம்
ஸக்காத் கொடுப்போம்
சன்மார்க்க நெறிதனை
சற்றும் பிசகாமல்
பின்பற்றி நாமும்
போர்க்களம் வெறுவோம்

ஏழைக்கிரங்குதலும்
எளியோர்க்குதவுதலும்
இந்த ரமழானில்-
ஏற்றமிகு கொள்கையென
எடுத்துக்கொண்டால் அது
எல்லா மாதத்திலும்
இழையோடட்டும்
அல்லாஹ் எமக்களித்த
அருட்கொடையே ரமழான்
அதைப்- பற்றிப் பிடித்து நம்
பண்பாட்டை வளர்ப்போம்!

(ஸீனாலெப்பை)

அல்குர்ஆன் குறித்த நபிமொழிகள்

(தொடர்பு- அரபாபக்க நிஸ்லா ரிஸ்வான்)

1. நிச்சயமாக இந்தக் குர்ஆன் பரிந்துரை செய்யக்கூடியதாகும். அது ஏற்கப்படக்கூடியதுமாகும். அதனைப் பின்பற்றினால் அவரை அது சுவனத்தில் சேர்க்கும். அதனை பின்பற்றாமல் விட்டுவிட்டால் அல்லது நிராகரித்தால் அவன் நரகின் அடித்தளத்தில் தள்ளப்படுவான். (அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத் ரழியல்லாஹு அன்ஹு. (ஆதாரம்: முஸ்லிம்)

2. குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்தவரையும், குர்ஆனையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும், குர்ஆனின் இரண்டு அத்தியாயங்கள் அல்பகரா, ஆலஇம்ரான் முன் வந்து அந்த இரண்டையும் ஓதியவருக்காக அல்லாஹ்விடத்தில் வாதாடும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

3. குர்ஆனின் விஷயத்தில் தர்க்கம் புரிவது இறை மறுப்புச் செயலாகும். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு, ஆதாரம்: அபூதாவூத்)

4. குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர். (அறிவிப்பாளர்: உஸ்மான் ரளியல்லாஹு அன்ஹு, ஆதாரம்: புகாரி)

5. இக்குர்ஆனின் ஒரு முனை அல்லாஹ்வின் கையிலும் மறுமுனை உங்கள் கைகளிலும் உள்ளது. எனவே இதனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் இம்மையில் வழிதவறமாட்டீர்கள், மறுமையில் அழிவும் மாட்டீர்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு, ஆதாரம்: தப்ரானி)

6. பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டுதல்களில் மிகச்சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதையாகும். தீனில் தீமையானது மார்க்கத்தில் புதிதாகப் புகுத்தப்பட்டதாகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். (ஆதாரம்: முஸ்லிம்)

7. இவ்வேதத்தைக் கொண்டே அல்லாஹ் சில கூட்டத்தாரை உயர்த்துகிறான். மற்றொரு கூட்டத்தினரை இதனைக் கொண்டே தாழ்த்துகிறான். சமுதாய உயர்வு, தாழ்வுக்கு காரணம் குர்ஆனே. (அறிவிப்பாளர்: உமர் ரளியல்லாஹு அன்ஹு, ஆதாரம்: முஸ்லிம்)

8. குர்ஆனின் சிறு பகுதியேனும் யார் உள்ளத்தில் மனனம் இல்லையோ அவர் உள்ளம் பாழடைந்த வீட்டைப் போன்றது. (அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்ரளியல்லாஹு அன்ஹு, ஆதாரம்: திர்மிதி)

9. எவர் குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை ஓதினால் நன்மை இருக்கிறது. ஒரு நன்மை அதுபோன்று பத்து மடங்காக்கப்படும். ''அலிஃப், லாம், மீம்'' ஒரு எழுத்து என்று சொல்லமாட்டேன். மாறாக அலிஃப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்துமாகும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத் ரளியல்லாஹு அன்ஹு, ஆதாரம்: திர்மிதி, தாரமி.)

10. குர்ஆனை ஓதக்கூடியவருக்கு உவமைகளையும், ஓதாமல் இருப்பவருக்கு உவமைகளையும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்துள்ளார்கள். குர்ஆனை ஓதக்கூடிய முஃமினின் உவமை பழத்தைப் போன்றது. அதனுடைய வாசனையோ மணமானது. அதனுடைய சுவையோ ருசிக்கத்தக்கது.

குர்ஆனை ஓதாத முஃமினின் உவமை பேரித்தம் பழத்தை போன்றது. அதற்கு வாசனை இல்லை. அதனுடைய சுவையோ இனிப்பானது. குர்ஆனை ஓதாத நயவஞ்சகனின் உவமை குமட்டிக்காய் போன்றது. அதற்கு வாசனை இல்லை. அதனுடைய சுவையோ கசப்பானது. குர்ஆனை ஓதக்கூடிய நயவஞ்சகனின் உதாரணம் துளசி செடியை போன்றது. அதனுடைய வாசனை மணமானது. அதனுடைய சுவையோ கசப்பானது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபு மூஸா ரளியல்லாஹு அன்ஹு, ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)



ஏழை வரி ஸக்காத்

மனித குலத்துக்கே வழிகாட்டியாக அனுப்பப்பட்ட நபி (ஸல்) அவர்கள் உலக மக்களுக்கு இஸ்லாத்தின் அனைத்து செயற்பாடுகளையும் மிகச் சிறப்பான முறையில் தெளிவுபடுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அந்த வகையில் உலகில் வாழும் காலத்தில் செல்வந்தர்களாக அல்லாஹ் யாரையெல்லாம் ஆக்கியிருக்கிறானோ அவர்கள் தங்கள் செல்வத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என்பதையும், அதனால் என்ன பலன் கிடைக்கும் என்பதையும் தனது திருமறைக் குர்ஆனிலும், நபியவர்களின் பொன் மொழிகளிலும் இறைவன் தெளிவாக அறிவித்துத் தந்துள்ளான்.

பணக்காரர்கள் தங்களின் சொத்துக்களை சரியான முறையில் இறை திருப்தியைப் பெறும் வகையில் செலவு செய்ய வேண்டும் என்பதினால் அவர்களின் சொத்துக்களை தூய்மைப்படுத்தும் விதமாக ஸக்காத் என்ற ஒரு கடமையை இறைவன் கட்டாயமாக்கியிருக்கிறான்.

ஸகாத் என்பது செல்வ வசதி படைத்த, இஸ்லாம் குறிப்பிட்டுள்ள தகுதிகளை அடையும் ஒவ்வொரு முஸ்லிமான ஆணும், பெண்ணும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயக் கடமையாகும்.

நபி (ஸல்) அவர்களின் ஏராளமான ஹதீஸ்களும் திருமறை வசனங்களும் ஸகாத் கட்டாயக் கடமை என்பதைப் பல்வேறு கோணங்களில் நமக்கு எடுத்து ரைக்கின்றன.

இன்று நமக்கு மத்தியில் இருக்கும் பல செல்வந்தர்களுக்கு ஸக்காத்தின் உண்மைத் தாத்பரியம், முக்கியத்துவம் புரியாமல் இருக்கிறது.

ஸக்காத் என்று நினைத்துக் கொண்டு ஏழைகளை வரிசையாக நிறுத்தி வைத்து ஐந்து ரூபாய் நாணயங்களை பங்கு வைப்பவர்கள், அரிசி, பருப்பு, என்று தானியங்களின் பொதியை பேனர் வைத்து போட்டோ பிடித்து படம் காட்டிப் பங்கு வைப்பவர்கள், என்று பலரும் தாங்கள் செய்யும் இந்தக் காரியங்கள் ஸக்காத்தில் அடங்கிவிடுகின்றன, இதுதான் ஸக்காத்தின் நடைமுறை, அதனால் நாம் ஸக்காத் கொடுத்துவிட்டோம் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள்.

ஆனால் இஸ்லாம் சொல்லும் ஸக்காத்தின் முறைமையோ வித்தியாசமானதாகும். ஸக்காத்தின் முக்கியத்துவம் என்ன அதை சரியான முறையில் நிறைவேற்றாவிட்டால் ஏற்படும் குற்றம் என்ன என்பதைப் பற்றியெல்லாம் தெளிவு படுத்துவதற்காகவே இந்த ஆக்கம் எழுதப்படுகிறது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து அம்சங்கள் மீது நிறுவப்பட்டுள்ளது.

1. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதியாக நம்புவது. 2. தொழுகையை நிலை நிறுத்துவது. 3. (கடமைப்பட்டவர்கள்) ஸகாத் வழங்குவது. 4. (இயன்றோர் இறையில்லம் கஅபாவில்) ஹஜ் செய்வது. 5. ரமழானில் நோன்பு நோற்பது. அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), நூல்: புகாரி 8

இஸ்லாமிய மார்க்கத்தின் ஐந்து தூண்களைப் பற்றி குறிப்பிடும் நபி (ஸல்) அவர்கள் அதில் மூன்றாவது அம்சமாக ஸக்காத் வழங்குவதை வலியுறுத்துகிறார்கள்.

ஸக்காத் என்பது எவ்வளவு முக்கியமான கடமை என்பதை மிகத் தெளிவாக நாம் அறிந்துகொள்ள முடியும்.

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே கலப்பற்றதாக்கி வணங்குமாறும், உறுதியாக நிற்குமாறும், தொழுகையை நிலை நாட்டுமாறும், ஸகாத்தைக் கொடுக்குமாறும் தவிர அவர்களுக்கு வேறு கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. இதுவே நேரான மார்க்கம். (அல்குர்ஆன் 99:5)

வார்த்தை விளக்கம்

ஸகாத் என்ற அரபி வார்த்தைக்கு வளர்ச்சியடைதல், அதிகமாகுதல், தூய்மைப் படுத்துதல் போன்ற பல அர்த்தங்கள் உள்ளன.

ஒருவன் கடமையாக்கப் பட்ட இந்த ஸகாத்தை வழங்குவதின் மூலம் அவனுடைய செல்வமும் உள்ளமும் பரிசுத்தமாகிறது. அல்லாஹ் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் பாக்கியங்களை அதிகப்படுத்துகிறான். இதன் காரணமாகத் தான் முஸ்லிம்கள் தங்களுடைய செல்வத்திலிருந்து கணக்கிட்டு குறிப்பிட்ட விகிதாசார அடிப்படையில் வழங்க வேண்டிய கட்டாய தர்மத்திற்கு ஸகாத் என்று இறைவன் பெயர் சூட்டியுள்ளான். வணக்கத்தை அல்லாஹ்வுக்கே கலப்பற்றதாக்கி வணங்குமாறும், உறுதியாக நிற்குமாறும், தொழுகையை நிலை நாட்டுமாறும், ஸகாத்தைக் கொடுக்குமாறும் தவிர அவர்களுக்கு வேறு கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. இதுவே நேரான மார்க்கம். (அல்குர்ஆன் 99:5)

இறைவன் முஃமின்கள் மீது விதியாக்கிய கட்டளைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது ஸக்காத்தைக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளதாக குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

ஆலதரங்கம்

கலைவாதி கலீல்

கலை - இலக்கியம் - விமர்சனம்

கவிக்கோவின் தலைமையில் கவியரங்கம்

சொல்லத்தான் நினைக்கிறேன்

பேரறிஞர், பேராசான், பெரும்புலவர், புதுக்கவிதைப் புனல், கவிக்கோ (கவி மன்னன்) என்ற பட்டத்துக்கு முற்றிலும் பொருத்தமான கவிக்கோ அப்துல் ரகுமான் அண்மையில் காலமானார். **பால்விதி**யின் பயணம் முற்றுப் பெற்றுவிட்டது. அன்னாரின் இழப்பு கலை, இலக்கிய, கவிதை, அறிவியல் உலகுக்குப் பேரிழப்பெனில் அதில் இரண்டாம் பேச்சுக்கே இடமில்லை. அன்னாரின் பிரிவினால் தாழாத சோகத்தில் உழலும் மனைவி மக்கள் மற்றும் உற்றார் உறவினர்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தை 'ஜவதரங்கம்' தெரிவித்துக் கொள்கிறது.

அதேவேளை கவிக்கோ இலங்கை வருகை தந்திருந்த போது நிகழ்ந்த சுவையான சம்பவமொன்றையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறது 'ஜலதரங்கம்'

கவிக்கோ அப்துல் ரகுமான், பல தடவைகள் இலங்கைக்கு வந்திருக்கிறார். முதல் தடவையாக (என்று நினைக்கிறேன்) அவர் கொழும்பு வந்த போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை, கவிக்கோவை கௌரவிக்கும் வகையில் கவியரங்கொன்றை ஒழுங்கு செய்திருந்தது. கவியரங்கு வானொலி நிலையத்தினுள் அமைந்திருந்த 6ஆம் இலக்க குமாரதுங்க கலையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவியரங்கை நேரடியாகப் பார்வையிட இலக்கிய ஆர்வலர்களும் பிரமுகர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவ்வேளை முஸ்லிம் சேவைப் பணிப்பாளராக விருந்தவர் வீ. ஏ. கபூர். அமைப்பாளராக இருந்தவர் இஷட். எல்.எம். முஹம்மத். கட்டுப்பாட்டாளர் பதவி வகித்தவர் எம்.எஸ். குத்தூஸ் மரைக்கார் (இன்று இம்மூவரும் உயிருடன் இல்லை)

பார்வையாளர்கள் வரிசையில் பேராசிரியர் அல்லாமா எம்.எம். உவைஸ், எஸ்.எம். கமால்தீன், ஏ.எம். சமீம், கவிமணி எம். சி. எம். சுபைர் போன்ற இன்னும் சில பிரபலங்கள் அமர்ந்திருந்தனர். இவர்களும் உயிருடன் இல்லை.

கவியரங்குக்கு கவிக்கோ தலைமை வகித்தார். இணைக் கவிஞர்களாக எம். ஏ. நுஃமான், புரட்சிக் கமால், மருதூர். ஏ. மஜீத், அன்பு முஹைதீன், கலைவாதி கலீல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். புரட்சிக்கமால் கவியரங்குக்கு வருகைதரவில்லை 'அரசியல் கருத்துக்கள் கூறுவதைத் தவிர்க்குக' என்ற முஸ்லிம் சேவையின் நிபந்தனையை ஆட்சேபித்து சேவைப் பணிப்பாளருக்கு ஒரு கடிதம் அனுப்பிவிட்டு கவியரங்கைத் தவிர்த்துக் கொண்டார்.

கவியரங்கு. ஆரம்பமானது

கவியரங்கின் தலைப்பு:

சொல்லத்தான் நினைக்கிறேன்.

கவிக்கோ தனது கம்பீரமான சிம்மக் குரலில் கவியரங்கைத் தொடங்கினார்.

அவர் இப்படிக் கூறினார்.

சொல்லத்தான் நினைக்கிறேன்.

சொல் - அத்தான் நினைக்கிறேன்

நீ சொல் அத்தான், அதை நான் நினைக்கிறேன்

அன்றே நினைத்துக் கொண்டேன் கவிக்கோ ஒரு பெருங்கவிஞன் தானென்று!

பங்கு கொண்ட கவிஞர்கள் அனைவரும் தங்கள் பங்களிப்பை சிறப்பாகவே செய்தனர். தங்களது ஆற்றலையும் வெளியிட்டனர். ஏனெனில் தமிழகத்தின் பெருங்கவிஞரின் தலைமையில் பாடிக் கொண்டிருக்கிறோமே, இலங்கைக் கவிஞர்களின் ஆற்றலை கவிக்கோவுக்குக் காட்ட வேண்டாமா என்ற உணர்வலைகளுடன் கவிபடித்தனர்.

கவியரங்கின் இடையில் வருகை தந்திருந்த அனைவருக்கும் கேக் முதலிய சிற்றுண்டிகளுடன் தேநீரும் வழங்கப்பட்டது. மேடைக் கவியரங்காக நடைபெற்ற இக்கவியரங்கு ஒலிப்பதிவும் செய்யப்பட்டது வானொலியில் ஒலிபரப்புவதற்கென்று. ஆனால் அது இறுதிவரை ஒலிபரப்பப்படவேயில்லை. காரணம் இருக்கிறது.

எம். ஏ. நுஃமான் தனது கவிதையில் பயன்படுத்திய இரண்டொரு வார்த்தைகளே கவியரங்கு ஒலிபரப்பப்படாமைக்கான காரணம். ஒன்று ''நான் ஒரு மனிதன்; பின்னர் நான் ஒரு முஸ்லிம்'' மற்றைய வார்த்தை, ஈமானோடு தொடர்புடையது. இவையெல்லாம் அன்றைய நிலைப்பாட்டில் அவர் பாடியவை. இவ்வார்த்தைகளை ஆட்சேபித்த சில பார்வையாளர்களும் பிரமுகர்களும் நுஃமானிடம் அவ் வார்த்தைகளை
நீக்கும்படி கூறினார்கள். பணிப்பாளர் கபூரும் வேண்டிக் கொண்டார். ஆனால் நுஃமான் அதனை மறுத்துவிட்டார். கவியரங்க ஒலிநாடா, கிடப்பில் போடப்பட்டது.

(எனது ஞாபக சக்தியின் எழுத்துருவம்)

உங்களது தரமான ஆக்கங்கள் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் அமைதல் வேண்டும்.
எமது ஈ-மெயில் முகவரிக்கு அனுப்புங்கள்.
kalaiwathykaleel@gmail.com
(கவிதைகள் 20 வரிகளுக்கு மேற்படக்கூடாது)

மெய்

தித்திப்பாய் இருப்பினும்;
உண்மை உண்மையே
பலமுறை கூறினாலும்;
பலர் கூறினாலும் பொய்
ஒருபோதும்
மெய்யாகாதில்லை

பொய்யானால் பலவிருக்கும்;
பலரினுள் பரவி இருக்கும்
ஆனால் உண்மையில் மட்டுமே
உண்மை என்றொன்றிருக்கும்
அது ஒன்றே இருக்கும்;
என்றும் ஒன்றாக இருக்கும்
பொய் பலமுறை தோரணையிடும்;
ஆனால் இறுதியில்
அடையாளமின்றி - அவமானப்பட்டு
அழிந்திடும்
அமைதியாய் இருந்து
காயம்பட்ட உண்மையே
இறுதியில் வீரமாய் - கம்பீரமாய்
வெற்றி நடை போடும்!
உண்மையே என்றும் நிலையானது;
உண்மையுடன் உண்மையாய்
வாழ்ந்திடு!

- மு.ஸ.பா. ஸம்ருத்

தீப்பந்தம்

இரத்த வெள்ளப் பெருக்குகளில்
விழுந்தெழுந்திய தேசம்;
வலிகளுந்து மூச்சுவிடும் முன்னர்
இன்னுமொரு நரபலி ஒன்றுக்காய்
வாகை சூடி
கடைகளுக்கு தீ மூட்டி
மஞ்சள் மரத்தில் சாரைப் பாம்புகள்
அக்கினி குஞ்சுகள் பொரித்து
சிலந்திக் கூடுகள் கட்டி
வக்கிர வலைகள் பின்னி
இனவெறியாட்டம்
படமெடுத்து ஆடுகின்றன.

அச்சமில்லாத அலைகள்
விடுதலை வேட்டைக்காக
எரியுண்ட கடைகளிலிருந்து
எழுந்து குதித்து
புயலாய் எழுந்து தலையாய் மாறி
விம்மிப் பெருக்கெடுத்து
நம் தேசத்தின் மடியில்.
குருதிவழியும் ஆறுகள்
காடாய் ஓடும்.

எறும்புக் கூட்டம் போல
சிறுகச் சிறுக சேர்த்து
கம்பீரத்துடன் உருவாக்கிய கடைகள்
தொழிற்சாலைகள்
உலவரும் இனவெறிப் விஷப்பேச்சினால்
ஊருறங்கும் வேளையில்
தீக்குச்சி ஏந்தி பொருளாதார மையத்தை
தீக்கிரையாக்கி
தீங்குபடைத்தவர்களால் தூய
மனங்கள்;
வெந்நீராய் கொதிக்கின்றன.

இந்த கொடிய தீயைத்
தாங்கிக் கொண்டு
துவண்டு நொருங்கி விழுந்திடாமல்
ஆர்ப்பரிக்கும் குருதிக்களத்தின்
கடலலையில்
பொங்கிப் பெருக்கெடுத்து
அடித்துக் கிண்பி சிறி
கரையில் கடுமணலுடன் மோதி
இரைந்து நிற்கிறது.
இனியேனும் பொறுமை காக்க
முடியாதென்று.

சட்டத்தின் கழுத்து நெருக்கி
முறிக்கப்பட்டிருக்கிறது
கை தட்டிச் சிரிக்கிறது நிலவு

மீண்டும் இப்பூமி
கருகிப் போன
மனித சாம்பலைப் போர்த்திக்கொண்டு
தெருவில் செல்லப் பார்க்கிறது.

நீ கொலைவெறியுடன்
போருக்கு வாவென்றழைத்து
சிவப்பு இரத்த ஆற்றை ஓட்ட
நேசிக்கின்றாய்
ஒரு கணம் யோசி
உருண்டோடின போர்க்காலத்தின்
கறுப்பு நாட்களின் நினைவுகளை
மீட்டிப் பார்!
கடைசியில்
தேசத்தின் மடியில் பிணங்கள் குவிக்கும்
மண்ணை மட்டுந்தான்
உன்னால் பார்க்க முடியும்.

கொஞ்சம் பழைய அல்பங்களை
தூசி தட்டி எடுத்துப் பார்
அருகிலுள்ள நினைவு தூபிகளுக்கு
சென்று பார்
செல்லும் திசையின் எல்லாவற்றுக்கும்
அர்த்தம் புரியும்.

நிரந்தரம் இல்லாத உலகத்தில்
தீக் குச்சியால்
நீ புளகாகிதம் அடைகின்றாய்
ஆனால்
நாங்கள் பொறுமை இழந்து
இரு கைகளையும் ஏந்தி இறைவனிடம்
கையேந்துவோமானால்
வற்றாத பெரு வெள்ளம் வரும்
எல்லாப் பிரார்த்தனைகளும் வரும்
கவனம்.

- இக்பால் அலி

தூவிப்பு

கொடுப்பனவு கேட்டே, பகிஷ்கரிப்பு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒரு மரணச் சடங்கில் வைத்து என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். ''நீங்கள் இப்போதெல்லாம் ஏன் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதில்லை? உங்கள் குரலையே கேட்க முடியவில்லையே!''

என் பதில் நிதானமாகவிருந்தது. ''நான் ஒரு சபதம் வைத்திருக்கிறேன். கலைஞர்களுக்கு எப்போது சன்மானம் - அதாவது கொடுப்பனவு வழங்குவார்களோ அப்போதுதான் வானொலியில் என் மின் பிரவேசம்.''

முன்னாள் அமைச்சர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். நானே தொடர்ந்தேன். ''ஆண்டாண்டு காலமாக வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவை ஏன் நிறுத்தினீர்கள். அதைத்தானே நாங்கள் கேட்கிறோம். புதிதாகக் கேட்கவில்லையே... விளம்பரத்தின் மூலம் மில்லியன் களுக்காக உழைக்கிறார்களே! அதில் சிறிய அற்பத் தொகையொன்றை பங்குபற்றும் கலைஞர்களுக்கு கொடுத்தால் என்ன...? கலைஞர்களை ஏமாந்த சோணகிரிகள் என்றா நினைத்துக் கொண்டார்கள்''

முன்னாள் அமைச்சர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். மீண்டும் நானே தொடர்ந்தேன்.

''நீங்கள் செல்வாக்கு மிக்க ஓர் அரசியல்வாதி. உங்களிடமும் கூறினேன். நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. பல முஸ்லிம் எம்.பி.க்களிடம் கூறினேன். அவர்களும் கண்டு கொள்ளவில்லை. புதிய எம்.பி.க்களிடம் கூறிப்பார்த்தேன். எல்லாம் விழலுக்கிறைத்த நீர். எனவே நான் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதில்லை என்று சபதம் எடுத்துக் கொண்டேன். இது என் இலட்சியம்; கொள்கை; போராட்டம். உண்மையில் இது எனக்காகவல்ல, எல்லாக் கலைஞர்களுக்காகவும்தான்.''

மஹிந்த ஆட்சியில் ஹட்சன் சமரசிங்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'ஆயுட்கால'த் தலைவரான பிள்ளர்தான் இந்த அவலம். அதற்கு நம்மவரும் உறுதுணை!

முன்னர், முஸ்லிம் சேவை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளவரும் ஒரு கலைஞருக்கு அவர் கொழும்பு வந்து திரும்புவதற்கு (மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற தூர இடங்களிலிருந்தும்) இரண்டாம் வகுப்பு புகையிரத ஆணைச் சீட்டு அனுப்பி வைப்பார்கள். வானொலி நிலையத்தில் நிகழ்ச்சி ஒலிப்பதிவு முடிந்ததும் வரவேற்பறைக்குச் சென்றால் ஒரு வவுச்சரில் கையொப்பமிடச் சொல்வார்கள். 'கைமேல்கம் மாசு' என்பது போல, உடனடியாகக் கையில் பணம் கிடைக்கும். மிக்க மகிழ்ச்சியுடன் ஊர் திரும்புவோம் 2ஆம் வகுப்பு இருக்கையில் இருந்து. இவையெல்லாம் இன்று கனவாய், கற்பனையாய்... பழங்காலத்துப் பசிய நினைவுகள்.

அப்வேளையில் கலைஞர்களுக்கு தேனீர் உபசாரம் உண்டு.

இன்று ஒரு கலைஞன் வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் பெருநாள் - திருநாள் கவியரங்கொன்றில் பங்குபற்றுவதாக இருந்தால் கூட தனது சொந்தப்பணத்தில் கொழும்பு வந்து, தனது பணத்திலேயே உண்டு, உறங்கி தனது பணத்திலேயே ஊர் திரும்ப வேண்டும். (ஓசிச் சோற்றில் வானொலியை வளர்த்துக் கொள்கிறார்களோ) கேட்டால் உங்களுக்குப் பேர் புகழ்தானே என்கிறார்கள்.

என் வினாக்களெல்லாம் இதுதான்! கிரிக்கெட் போட்டியொன்றில் 'டக்' அடித்தவர், ஏன் விளையாடாமல் இருப்பவருக்குக் கூட கொடுப்பனவு - சம்பளம் உண்டு! ஏன் புகழ் பெற்ற கலைஞன், கவிஞனுக்கு சிறிய கொடுப்பனவு கூட இல்லை? முன்னர் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவை ஏன் நிறுத்தினீர்கள், கட்டளையிட்டது யார்? கலைஞர்கள் என்ன கிள்ளுக்கீரைகளா? விளம்பரத்தின் மூலம் கோடி கோடியாகப் பணம் புரள்கிறதே... அதில் ஒரு சின்னஞ் சிறு தொகையையாவது கொடுத்தால் என்ன? முஸ்லிம் அமைச்சர்கள் ஏன் மௌனம் காக்கின்றனர். எனவேதான் என் நியாயமான உரிமைப் போராட்டம் வெல்லும் வரை நான் வானொலிகளைப் பகிஷ்கரிக்கிறேன். உண்மை அதுதான்!

***

எங்கள் அன்புச் செல்வமே

வைகறைப் பொழுதினிலே
வந்து உதித்திட்ட எங்கள் செல்வமே
என் வதனம் பார்த்திட்டால்
உள்ளமே உவகையில் துள்ளுமே!

மகளே உந்தன் மழலைச் சொல் கேட்டால்
மனக்கவலையெல்லாம் மறந்து போகுதே
நாளொருமேனியும்
பொழுதொருவண்ணமுமாய்; நீ
நலமாய் வளர வேண்டும். அது
எங்கள் பிரார்த்தனையே.

கல்வியில் சிகரமாயத் திகழ வேண்டும் நீ; ஆய
கலைகள் அனைத்தையும் கற்க வேண்டும்; இன்று
தத்தித்தத்தி நடைபயிலும் நீ; நாளை
தத்துவங்கள் பலவற்றைக் கூற வேண்டும்!

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அகிலத்தில் அருவியதாய் ஓட வேண்டும் நீ; நிகரற்ற
அறிவும் அதில் கலக்க வேண்டும்; உன்னை ஈன்ற
அன்னையும் பிதாவும் அதைக்கண்டு மகிழ வேண்டும்.

இரக்கத்தை இனிதே புகட்ட வேண்டும்.
இணையில்லா இறைவன் வழி நடக்க வேண்டும்
எத்திசையிலும் உன் புகழ் ஓங்க வேண்டும்; இறைவன்
எங்களுக்கும் அதைக்காணும் பாக்கியத்தைத் தர வேண்டும்

முழுமதிபோல் ஜொலிக்க வேண்டும்; வாழ்வில்
முழுமையான இன்பத்தையும் நுகரவேண்டும் நீ; -
நாளைய உலகின் உத்தமியாயத் திகழ வேண்டும்
நாளிலும் போற்றும் நாயகி பாத்திமா வழி சொல்ல வேண்டும்.

எங்கள் ஆருயிர் பேத்தியாம் **அனா மெஹறீன்**
எலா வளமும் பெற்றிப் புவியில்
நூற்றாண்டு காலம் வாழ மனம் நிறைந்து
வாழ்த்துகிறோம் மகளே; உனக்காக நித்திய
இறைவனிடம் நித்தமும் கையேந்தி நிற்கின்றோம்.

திருமதி நாஸிறா காரியப்பர் பரீட்
கதீஜாபாலை, நெஜரியா

தீர்க்கமான முடிவொன்றை எடுக்கும் நிர்ப்பந்தத்தில் முஸ்லிம் எம்.பிக்கள்

மீண்டும் மீண்டும் முஸ்லிம் சமூகத்தின் பொருளாதாரத்தை இலக்கு வைத்து வேண்டுமென்றே அழித்து வரும் நாசகாரிகளை கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்புக் கொண்ட பொலிஸாரும் பொலிஸ் திணைக்களமும் அதனைச் செய்வதை விடுத்து, கடை எரிப்பு சம்பவங்கள் இடம் பெறும் போதெல்லாம் அதற்கு வேறு வியாக்கியானம் கூறி வருவது கேவலமானதென அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மகியங்கனையில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனம் ஒன்று எரிந்து கொண்டிருக்கும் போதே, அத்தப் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு சம்பவத்தைத் தான் எடுத்துரைத்த போது 'வயர் சோட்டாய்' இருக்கலாம் என்று அந்த அதிகாரி பதிலளிக்கின்றார். கடந்த வாரம் மஹரகமையில் முஸ்லிம் ஒருவரின் கடை எரிந்த போதும் அங்குள்ள பொலிஸ் பொறுப்பதிகாரி இதே போன்றதொரு பொறுப்பற்ற பதிலைத் தான் கூறினார்.

தொடர்சியாக 2 மாதங்களாக முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார நிறுவனங்கள் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கின்றன. பல்லிவாயல்கள் பெற்றோல் குண்டுகளால் தாக்கப்படுகின்றன. அதுவும் நள்ளிரவிலும் நடு நிசியிலும் மிகவும் நிட்டமிட்டு இந்த அராஜகங்களை இனவாதிகள் புரிந்து கொண்டிருக்கும் போது சிறுபான்மைச் சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் சட்டத்தை கையிலெடுக்காமல் சாக்குப் போக்குச் சொல்லித் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். எவ்வளவு தான் நாங்கள் உரத்துச் சொன்னாலும் அவர்களுக்கு உறைப்பதாக இல்லை. அரசாங்கமும் இற்றை வரை காத்திரமான எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

முஸ்லிம்களும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக முஸ்லிம் அரசியல் வாதிகள் சமூகத்தின் நலனை முன்னிறுத்தி அரசியல் தீதியான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கடைகள் எரிந்து கொண்டிருக்கும் போது விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னரே இப்படித்தான் ஏற்பட்டதென பொலிஸார் கூறுவது இந்த நாட்டிலேயே நடக்கின்றது. மகியங்கனையில் கடை எரிந்த சமயம் இரண்டு பொலிஸார் அந்தக் கடைக்கு முன்னாலேயே நின்று கொண்டுமிருந்தனரென அங்குள்ளவர்கள் மக்கள் தெரிவிக்கின்றனர். நுகேகொடை கடைகளை தான் தான் எரித்ததாக முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் இப்போது ஒப்புக் கொண்டிருக்கின்றார். எனவே பொலிஸார் பொறுப்பற்ற பேச்சுக்களை நிறுத்தி தீய சக்திகளை கண்டு பிடித்து சட்டத்தின் முன் கொண்டு வரா விட்டால் நாட்டில் விபரீத விளைவுகளே ஏற்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி - பிரதமர் இப்தார் நிகழ்வை பகிஷ்கரிப்பது ஆரோக்கியமானதல்ல

மு.கா அக்கரைப்பற்று அமைப்பாளர் அஷ்ஷெய்க் ஹனீபா மதனி

(திகாமடுல்ல திருபர்)

இப்தார் நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடாத்துவது ஆட்சியாளர்களின் கடமைகளில் ஒன்றல்ல. காலா காலமாக இந்த நாட்டில் முஸ்லிம்கள் நோன்பு நோற்கின்ற போது இப்தார் நிகழ்வுகளையும் நடாத்திக் கொண்டு வந்திருக்கின்றனர். இவ்வாறான ஓர் நிலைமையில் முஸ்லிம்களுடைய சமய உணர்வுகளையும், நோன்பு கால வழிபாடுகளையும் அரசாங்கமும், ஆட்சியாளர்களும் அங்கீகரித்து அதில் அவர்களும் பங்கேற்று பரவசமடைகின்றார்கள் என்பதனை வெளிக்காட்டுகின்ற நிகழ்வுதான் ஜனாதிபதியினாலும், பிரதமரினாலும் ஒழுங்கு செய்யப்படுகின்ற இப்தார் வைபவங்களாகும். இவ்வாறான நிகழ்வுகளை நடாத்தி நாட்டில் சிறுபான்மை மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற வகையில் இங்குள்ள ஆட்சியாளர்கள் நடந்து கொள்வது இவர்களின் பெருந்தன்மையையே வெளிக்காட்டுகின்றது என அக்கரைப்பற்று மாநாகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், அம்பாறை மாவட்ட அவைத்துப் பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவரும், ஸ்ரீலங்கா காங்கிரசின் அக்கரைப்பற்று அமைப்பாளருமான அஷ்ஷெய்க் எல்.எல்.எம். ஹனீபா மதனி தெரிவித்தார்.

நமது ஜனாதிபதியும், பிரதமரும் நடாத்தவிருக்கின்ற இவ்வருட இப்தார் நிகழ்வுகளில் முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளக்கூடாது எனும் ஒரு விவகாரம் சமூக வலைத்தளங்களில் பரவலாக விவாதிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, மேற்படி கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், இதனைப் புரிந்து கொள்ளாது, சட்டபூர்வமான ஓர் அரசாங்கம் நடாத்துகின்ற நிகழ்வை புறக்கணிக்குமாறு சமூகவலைத்தளங்களில் எதிரான செய்திகளையும், கருத்துக்களையும் வெளிவிடுவது இஸ்லாமியப் பார்வையிலும், அரசியல் நோக்கிலும் ஓர் ஆரோக்கியமான விடயமாகத் தோன்றவில்லை.

நமது நாட்டில் தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படுகின்ற இன வன்முறைச் செயற்பாடுகள் மிகுந்த வேதனைக்குரியதாகும். எனவே அவற்றைக் கண்டிப்பதும் தண்டிப்பதும் அரசின் தார்மிகக் கடமையாகும். இருப்பினும் இதனை 'இப்தாருடன்' முடிச்சுப் போட்டுக் கொள்வது எமக்கு வெற்றியையோ விமோசனத்தையோ தருவதற்குப் பதிலாக எதிர்மறையான முடிவுகளை கொண்டு வந்து விடுமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இப்தார் போன்ற முஸ்லிம்கள் மேற்கொள்ளும் சமய ரீதியான விவகாரங்களில் அரசாங்கம் காண்பிக்கின்ற நல்லெண்ணத்தை சீர்குலைக்க எத்தனிக்கின்ற தீய சக்திகளுக்கு தீனி போடும் விதமாக நாம் நடந்துவிடக்கூடாது.

கடந்த அரசாங்க காலத்தில் போதுதான் இவ்வாறான இனமுரண்பாட்டு நடவடிக்கைகளும் வெறுப்பூட்டும் பேச்சுக்களும் ஆரம்பிக்கப்பட்டு மிக உச்சக் கட்டத்தை அடைந்திருந்தன. ஆனாலும், அப்போதைய ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் போன்ற முக்கிய ஆட்சியாளர்களின் இப்தார் வைபவங்களுக்கு நாம் எந்தவித எதிர்ப்புக்களையும் காண்பிக்கவில்லை. எனவே எமக்கு ஏற்பட்டுள்ள துயரமான நிலையில் இருந்து நமது சமூகத்தினைபாதுகாத்துக் கொள்ள தூர நோக்குடனும், தெளிவான சிந்தனையுடனும் நாம் பயணிக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும் என்றும் மேலும் கூறினார்.

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அளுத்கமை பகுதியில் குறைந்த வருமானம் பெறும் 2000 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கும் வைபவம் அளுத்கமை நகரில் அண்மையில் நடைபெற்றது. அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன நிகழ்வில் உலர் உணவுப் பொதிகளை கையளிக்கும் போது பிடிக்கப்பட்ட படம்.
(படம் - பேருவளை திருபர் - பீ.எம். முக்தார்)

பயங்கர - அபாயகர சமிக்ஞை எம்முன் கண்சிமிட்டி நிற்கிறது

முன்னாள் அமைச்சர் அஸ்வர்

(எம்.ஸ்.எம்.ஸாகிர்)

கண்டிப்பது எமது கடன். ஆனால் தண்டனை விதிப்பது அரசாங்கத்தின் கடன். கண்டிப்பதை நாம் சரிவரச் செய்து வருகின்றோம். ஆனால் தண்டனை விதிப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்கின்றது.இதனை அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தவறவிட்டு வருவது மிகவும் பயங்கரமான, அபாயகரமான ஒரு சமிக்ஞை எம்முன் கண்சிமிட்டி நிற்கின்றது என முன்னாள் முஸ்லிம் விவகார அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

தொடராக முஸ்லிம் வர்த்தக ஸ்தாபனங்கள் மீது நடத்தப்படுகின்ற தாக்குதல் குறித்து விடுத்துள்ள அறிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

சர்வதேச யஹூதிப் பட்டாளத்தின் ஒரு பிரிவினர் இன்றும் இலங்கையில் தமது இறக்கைகளை விரித்திருக்கின்றார்கள் என்ற உண்மையை நாங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அதன் சாவல்தான் முஸ்லிம் உடைமைகள், பள்ளிவாசல்கள் மீது நடத்தும் அட்டூழியங்கள் இப்பொழுது தொடராகப்பட்டிகின்றது.

இந்தப் புனித மாதத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெறுவதை இந்த அரசாங்கம் தடுக்காமல் இருப்பது எமக்கு மட்டுமல்ல சர்வதேச முஸ்லிம் சமுதாயத்தின் கண்டனத்துக்கும் உரித்தாகின்றது. எனவே, இன ரீதியாக பிரச்சினையைத் தூண்டி இந்த அரசாங்கத்தை அழிப்பதற்கு பலர் முயற்சி செய்து வருவதாக ஓர் அமைச்சர் கூறியுள்ளார். முஸ்லிம் மக்கள் மீதும் புனித தலங்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைப் பார்க்கும் போது இன்று அரசாங்கத்தில் உள்ள இனவாதிகள்தான் இதற்கு பொறுப்பாளர்கள் என்பதை முஸ்லிம் அமைச்சர்கள் அறிய வேண்டும்.

எனவே பேச்சளவில் தங்களுடைய கண்டனத்தை தெரிவிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் செயலில் இறங்க வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.முஸ்லிம் மக்கள் சென்ற தேர்தலில் அளித்த வாக்குகளுக்கு அவர்களது பிரச்சினைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளார்கள்.

சாக்குப்போக்கு சொல்லுவதன் மூலமும் உள்விருந்து கண்டங்களை விடுப்பதன் மூலம் மட்டும் நிறுத்திக்கொள்ளாது வெளியே இறங்கி கண்டனக் கணைகளை நேரடியாக அரசின் பக்கம் திருப்புவதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்னும் காலந்தாழ்த்தாமல் முன்வரவேண்டும். அப்படி இல்லையேல் ஒட்டுமொத்தமாக அனைவரும் இராஜினாமாச் செய்து எதிரே வருகின்ற மஹிந்த ராஜபக்ஷவினுடைய அரசாங்கத்தில் சேர்ந்து முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வேண்டி திட்டம் ஒன்றை தீட்டுவதற்கு அனைவரும் ஒன்று திரள வேண்டும் என மீண்டும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றும் தெரிவித்துள்ளார்.

போரா சமூகத்தின் ஏற்பாட்டில் மர நடுகைத் திட்டம்

(ஏ.எல்.எம்.இர்ஷாத்)

சுற்றாடலை பாதுகாப்பது அனைவரதும் கடமையும் கடப்பாடும் ஆகும். அரசும், அரசு அல்லாத அனைத்து நிறுவனங்களும் இதற்கு முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அந்தவகையில் போரா சமூகத்தினரும் சுற்றாடலை பாதுகாத்து பசுமையானதாக வைப்பதற்கு மரநடுகை எனும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இத்திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பு ஷபாபுல் ஈஸி சாலி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் பௌசி கலந்து கொண்டதுடன் போரா சமூகத்தின் ஆன்மீக தலைவர் ஷேக் யூசுப் பாய் இப்றாஹிம், ஏற்பாட்டாளர் ஷேக் அலி அஸ்கர் உப்ரி வாலா, பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.மஹிந்த வீரக்கொடி, கொழும்பு தெற்கு பகுதி எம்எஸ்பி பாலித மனாமல் டெனியா, ஏ.எல்.பி தயாரத்ன உள்விட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் போரா சமூக பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பம்பலப்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ மஹிந்த வீரக்கொடி, ஆன்மீகத் தலைவர் ஷேக் யூசுப் பாய் இப்றாஹிம் உள்விட்டோர் மரக்கன்றுகளை நாட்டினர்.

முன்னுரிமையின் அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல் வேண்டும்

திருகோணமலை அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(திருமலை சமீன் முஹம்மட்)

அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் போது துறைசார் தலைவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை உள்வாங்கி தேவையின் முன்னுரிமையின் அடிப்படையில் அவற்றை தயாரிப்பது அத்திட்டம் உரிய மக்கள் பயனடைய வாய்ப்பு ஏற்படும் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் எல்.ஏ.புஸ்பகுமார நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் தொடர்பான கூட்டத்தின் போது தெரிவித்தார்.

துறைசார் ரீதியாக பல துறைகள் உள்வாங்கப்பட்டு அவற்றுக்கான செயல்திட்டங்கள் மாவட்ட ரீதியாக தயாரிக்கப்பட்டு வரும் நிலையில் இன்றைய நாளில் சுகாதாரம், விளையாட்டு, கலாசாரம் ஆகிய துறைகளுக்கான செயல் திட்டம் தயாரிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இன்று அதிகமாக திட்டங்கள் பொதுமக்களின் தேவைகளை கருத்திற்கொள்ளாது செயற்படுத்தப்படுகின்றன. சிறந்த செயற்திட்டத்தை மாவட்ட அடிப்படையில் துறைசார் ரீதியாக தயாரித்து மேற்கொள்ளும்போது அதன் மூலம் ஏற்படும் நன்மைகள் நாட்டின் அபிவிருத்திக்கு வலுசேர்க்குமென்று இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.அருள்ராசா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.பரமேஸ்வரன், துறைசார் தலைவர்கள், உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

சமூக வட்டம் செயற்றிட்டத்தின் பயிற்சி வகுப்பு

(கிண்ணியா ஏ.ஆர்.எம்.றியாஸ்)

அரசாங்க தகவல் தொழில்நுட்ப அதிகார சபையினால் நடைமுறைப்படுத்துகின்ற முன்மாதிரியான சமூக வட்டம் (Smart Social Circles) எனும் செயற்திட்டத்தின் பயிற்சி வகுப்பு நேற்று சேருவெல பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது. இதனை ஸ்கில் இன்டர் நெஷனல் Skills international (Pvt) நிறுவனம் கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்துகின்றது.

அதன் ஆரம்பமாக சேருவெல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் விங்கபுரம் , அரிசிமாங்கேணி கிராமத்தில் தெரிவு செய்த பயனாளிகளுக்கான பயிற்சி நடைபெற்றது.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து பத்து பத்து பயனாளிகள் தெரிவு செய்து 20 பேருக்கான பயிற்சி நடைபெற்றது இவ்வாறு நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு சேருவெல பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.இதன் போது சமூக ஊடகங்களான முகப்புத்தகம், வட்ஸ்ஆப், வைபர், டுவிட்டர் போன்றன பயிற்றப்படுகின்றது.

பயிற்சி பெற்றவர்கள் அவர்களின் ஊரில் உள்ள குறை நிறை , சமூக சேவை ,அபிவிருத்தி கவதொழில் விளம்பரம் போன்றவற்றுக்காக சமூக ஊடகத்தை பயன்படுத்துவர்கள்.

குருநாகல் சிட்டி ஜம்மியப்பதுல் உலமா சபையினால் விசேட நோன்பு திறக்கும் வைபவம் மாவத்தகம வீரசிங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஜே இம்ரான் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜே. சீ அலவத்துவெல, முஜிபுர் ரஹ்மான் மற்றும் சர்வசமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதை படங்களில் காணலாம். (குருநாகல் இக்பால் அலி)

எம்.எம்.எம்.நூறுல்ஹக்
சாய்ந்தமருது

இனமுறுகலை நல்லாட்சி கட்டுப்படுத்துமா?

இலங்கை முஸ்லிம்கள் சிங்கள - பௌத்த ஆதிக்க சக்திகளின் கெடுபிடிகளை அனுபவிக்க தொடங்கியதென்பது நேற்று இன்று அல்ல. மாறாக ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றை அது கொண்டிருக்கின்றது. சிங்கள பேரினவாதத்தின் முதற்படியாக முஸ்லிம்கள் காவு கொடுக்கப்பட்டிருப்பது இலங்கை வரலாற்றில் மாசு படிந்த பக்கமும் நமது துயர் மிகுந்த கதையுமாகும்.

கூட்டு மொத்தமான ஒரு தாக்குதல் முஸ்லிம் மக்கள் மீது தொடுக்கப்படுவதென்பது பரவலாகவும் உரத்துப் பேசவும் உட்படும் என்கின்ற முன்னாக்கிரதை ஒழுங்கு நிலையில் நின்று கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற நன்கு திட்டமிடப்பட்ட ஓர் இயங்கியல் செயற்பாட்டை தீட்டிக்கொண்டு முஸ்லிம்கள் மீது அன்னமைக்காலமாக இரண்டு விதமான எதிர்த்தாடல்களை சிங்கள-பௌத்த ஆதிக்க சக்திகள் மேற்கொண்டு வருகின்றனர்.

1. முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மீது அங்கொன்றும் இங்கொன்றுமாக தீ வைத்தும் பொருட்களைச் சேதப்படுத்தியும் இழப்பீடுகளை முஸ்லிம்கள் மீது ஏற்படுத்தி கொண்டிருப்பது.

2. இலங்கை முஸ்லிம்களின் மதஸ்தலமான பள்ளிவாசல்கள் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் ஊடாகவும் மாற்று வழிகளின் மூலமும் தகர்ப்பதும் உடைப்பதுமான அத்துமீறல்களை மேற்கொண்டு வருவது.

மகரகம, மகியங்கன, திருகோணமலை, மருதானை, நுகேகொட,தம்புள்ள, நாவலப்பிட்டி என்று பல பகுதிகளிலும் மேற்குறித்த இரண்டு விதமான முஸ்லிம் வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்களை அங்குமிங்குமாக மேற்கொள்வதன் நிகழ்வினால் இது ஒரு திட்டமிட்ட செயற்பாட்டின் பின்புலங்கள் என எம்மை நோக்க வைக்கின்றது.

''சிறு துளி பெரும் வெள்ளம்'' போல் சிறுகச்சிறுக செய்யப்பட்டு வருகின்ற முஸ்லிம்கள் மீதான இத்தகைய அத்துமீறல்களும் அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்டு வருகின்ற இழப்பீடுகளும் கூட்டு மொத்தமாக பெரிதாக காண்பிக்காத போதிலும் அதன் தாக்கமென்பது பொருளாதார ரீதியாக பல கோடி நஷ்டங்களை ஏற்படுத்தி இருப்பதை நாம் புரிந்து கொள்ளாத ஒன்றுமல்ல.

அதே போன்று பள்ளிவாசல் தாக்குதல் என்பது பொருளாதார சேதங்களுக்கு அப்பால் முஸ்லிம்களின் உணர்வோடும் உயிரோடும் வாழ்வோடும் உரிமையோடும்இரண்டறக் கலந்து ஆதிக்கம் செலுத்துகின்ற ஒன்றென்பதனால், இந்த அழிவுகள் பாரிய தாக்கங்களை முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படுத்தக் கூடியதுமாகும்.

மத ரீதியாக முஸ்லிம்கள் மீது முன்னைவைக்கப்படுகின்ற எதிர்ப்புணர்வு அல்லது பாராபட்சமான நிகழ்வுகளின் ஊடாக தாக்குதல்களை முன்னிறுத்துகின்ற போது முஸ்லிம்கள் தீவிரமாக கிளர்ந்தெழுந்து ஒரு கலவரச் சூழலுக்குள் உணர்ச்சிவசப்பட்டு வந்து விடுவார்கள் என்ற எதிர்பார்ப்பின் உந்துதலால் எமதுமதம்,மதத்தலங்கள் மீதானஅத்துமீறல்களை மேற்கொள்வதன் தாற்பரியம் என்பது நமது அறிதலுக்கு அப்பாலானதல்ல.

முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது தற்செயலாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்வாக நோக்க முடியாததுமாகும். ஏனென்றால் இலங்கையின் வர்த்தக பொருளாதாரம் முஸ்லிம்களின் கைகளில் அதிகம் இருப்பது போன்ற ஒரு பிரமை கட்டமைக்கப்பட்டு அதன் மீதான காழ்ப்புணர்வுகள் வேகமாக பரப்பப்பட்டும் வந்திருப்பதை காண்கின்றோம்.

இதனோர் உட்சபட்சமான ஒரு வெளிப்பாடாகவே 1915 களில் கண்டி- கம்பளை சிங்கள × முஸ்லிம் கலவரத்தைப் பார்க்கின்றோம். அதன் தொடர்ந்தேர்ச்சியான நடவடிக்கையாக எமது வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம்.

முஸ்லிம்களின் வர்த்தகத்தின் மீதான காழ்ப்புணர்வின் அல்லது எதிர்ப்புணர்வுகளின் மேலீடாகத்தான் இலங்கையின் தலைநகரம் கொழும்பு என்பது மாற்றியமைக்கப்பட்டு ஸ்ரீ ஜயவர்தனபுர என மாறியதன் பின்னணியிலும் முஸ்லிம் வர்த்தகத்தின் உடைப்பு இருந்ததென்கின்ற ஒரு விமர்சனமும் இது விடயத்தில் இருந்து வருகின்றது.

கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கோட்டை,புறக்கோட்டை பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் முஸ்லிம்களின் வியாபாரம் ஓங்கிக் காணப்படுவதை கட்டுடைப்புச் செய்து, சிங்கள வர்த்தக நிலையங்களாக பெருக்கெடுக்கச் செய்வதற்காக இலங்கையின் தலைநகர மாற்றம் நிகழ்ந்ததாயினும் அது பாரிய வெற்றியைத் தரவில்லை.

இதற்கு முக்கிய காரணம் கொழும்பு துறைமுகம் அமைந்துள்ள கோட்டை, புறக்கோட்டை பகுதிகளை உள்ளடக்கிய கொழும்பு வர்த்தக பரிவர்த்தனங்கள் முஸ்லிம்களின் கைகளில் ஏற்கனவே அதிகம் இருந்ததினாலும் அதனை ஒட்டியதாக துறைமுகம் அமைந்திருந்ததனாலும் முஸ்லிம்களின் வர்த்தகம் பறிபோகாத அல்லது கைமாற்றம் ஏற்படாத ஓர் உறுதிப்பாட்டைப் பெற்றது.

இப்படி முஸ்லிம்களின் வர்த்தகத்தின் மீதும் அவர்களின் மதத்தலங்கள் மீதும் பொறாமையையும் வெறுப்புணர்வையும் விதைப்பதில் சிங்கள-பௌத்த ஆதிக்க மனோபாவமுடைய சிலரின் வெளிப்பாடுகளும் அதனை ஒட்டிய முன்னகர்வுகளும் காலத்துக்கு காலம் முஸ்லிம் மக்கள் மீது நன்கு திட்டமிட்டு மேற்கொள்வதற்கு பௌத்த துறவிகளையும் சிங்கள காடையர்களையும் ஏவி விடுவதற்கான சில அமைப்புக்கள் எப்போதும் முன்னின்று உழைத்து வந்திருப்பதைப் பார்க்கலாம்.

இவர்களின் இந்த ஈனச் செயல்களை கண்டும் காணாததும் போல் ஒரு மறைமுகமான ஒரு ஆதரவு தளத்தை இலங்கையின் ஆட்சியாளர்கள் வழங்கி வந்திருக்கின்றனர். இந்த தொடர்ச்சியின் நிரலாகவே இன்றெழுந்திருக்கின்ற முஸ்லிம் மக்கள் மீதான பௌத்த- சிங்கள ஆதிக்க சக்திகளின் அத்துமீறல்களை அடக்கி ஒடுக்குவதில் சரியான ஒரு திட்டமிடலை ஆட்சியாளர்களினால் கைக்கொள்ள முடியாதிருப்பதன் பின்னணியாகும்.

முஸ்லிம் மக்கள் மீதான எதிர்ப்புணர்வில் செயற்படுகின்ற சிங்களவர்களின் தொகை மிக குறுகியதாக இருந்தாலும் அவர்களுக்கான ஆதரவுத்தளம் பெருகியதாகவே காணப்படுகின்றது. சிறு குழுவினர்களை எதிர்ப்பது சிங்கள மக்களுக்கு ஒரு இயலாத காரியமாக இருப்பதென்பதும் இதனை வலியுறுத்துவதாக அமைகின்றது. இதற்கு முக்கிய காரணம் முஸ்லிம் மக்கள் மீது தொடுக்கப்படுகின்ற தாக்குதலின் போது குறித்த பிரதேசவாசிகளை விட அடுத்த பிரதேசவாதிகளைக் கொண்டிருப்பதாகும்.

உதாரணமாக அளுத்கமையில் ஒரு சம்பவம் நடைபெறுகிறதென்றால் அப்பிரதேச சிங்கள மக்கள் பெரிதாக அதில் பங்காற்றுவதில்லை. இது முஸ்லிம்களுக்கு ஒரு ஆறுதலான பக்கமாக இருந்த போதிலும் குறித்த பிரதேசத்திற்கு வெளிப்பகுதிகளிலிருந்து வருகை தருகின்ற வன்ம உணர்வுகளைக் கொண்டவர்களாளயே தாக்குதல்கள் நடத்தி முடிக்கப்படுகின்றன. இதனை எதிர்த்து உள்ளூர் சிங்கள மக்கள் இயங்குவதை தடை செய்கின்றது. இது ஆதரவுத்தளத்தை பெருப்பித்து காண்பிக்கின்றது.

இதன் இன்னொரு முகமாகவே இலங்கையின் பாதுகாப்பு படையினர்கள் பக்கச் சார்பாகவும் அத்துமீறல்களில் ஈடுபடுகின்ற சிங்கள துறவிகள், காடையர்கள் மீது கட்டுப்படுத்துவதற்கான முன்நடவடிக்கைகளையோ, மற்றும் சட்ட நடவடிக்கைகளையோ நீதியாகச் செய்வதற்கு முன்வருவதில்லை. இதுவும் இன்னொரு வகையில் சிறு சிங்களக் குழுக்களின் இனவாதச் செயற்பாட்டை ஊக்குவிப்பதாகவும் அதன் ஆதரவுத்தளம் அகன்றதாக மாறுவதற்கும் வாய்ப்பளிக்கின்றது. இவ்வாறு இலங்கையில் சிங்கள × பௌத்த ஆதிக்க பேரினவாத செயற்பாடுகள் நீண்ட காலமாக அதுவும் தொடர்ந்தேர்ச்சியான ஒரு நடவடிக்கை கட்டமைப்பை பெற்று வருவது வெறுமனே அரசியல் நோக்கத்தை மையப்படுத்திய ஒரு வெளிப்படுத்துகை என்று இதன் தடத்தை குறுக்கி அடையாளப்படுத்த முடியாது. இது ஒரு அகன்ற பௌத்த ராச்சியத்தின் கட்டமைப்பையும் பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தான தனிநாடு இலங்கை என்கின்ற உணர்வு பூர்வமான நிகழ்ச்சி நிரலில் வடிவமைக்கப்பட்டு முன்னெடுத்து வருகின்ற ஒரு கோட்பாட்டு ரீதியான உருவாக்கத்தில் மோதுகையாக இதனை பார்க்க வேண்டி இருக்கின்றது.

இந்த விமர்சனம் வெறுமனே யூகத்தின் அடிப்படையில் எழுப்பப்படுகின்ற ஒன்றல்ல. மாறாக இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சமூகத்தினர்கள் மீதும் ஓர் இனச்சுத்திகரிப்பு என்ற வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பதையும் சிங்கள × பௌத்த ஆதிக்க மேலாண்மையை வெகுவாக காலூன்றும் வகையிலும் சுதந்திர இலங்கையின் அரசியல் நகர்வுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆயின் முஸ்லிம் மக்கள் மீதான சிங்கள- பௌத்த ஆதிக்க சக்தி மனோபாவம் என்பது மிகுந்த வலிமையுடையதாக கட்டியெழுப்பப்பட்டிருப்பதையும் முஸ்லிம் மக்களாகிய நாம் மறந்து விடக்கூடாது.

இத்தகைய பின்புலங்களையெல்லாம் சட்டை செய்து கொள்ளாத நமது இளைஞர் சமூகமும் குறுகிய மூத்தோர்களும் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கத் தவறிய இவர்கள் இன்றைய நிகழ்வை அனுபவிக்கின்ற போது ஒரு கொதிப்பு நிலைக்கு உள்ளாகி, இளம் இரத்த முறுக்கின் உந்துதலினாலும் சில மூத்தோர்களினாலும் வீர வசனங்களைஆக்ரோசமான விமர்சனங்களாக முன்வைப்பதனையும் காண்கின்றோம். குறிப்பாக வலைத்தளங்களில் இதனை அதிகமாக காணக்கூடியதாக உள்ளது. அடங்கி வாழ்வதற்கு நாம் என்ன கோழையா என்கின்ற ஒரு உசுப்பேத்தலுக்கு மதிப்பளித்து முஸ்லிம் தரப்பிலிருந்து சிங்கள

வர்களுக்கு எதிரான ஒரு சிறிய சம்பவம் நடைபெறுவதை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற சிங்கள பேரினவாதிகளுக்கு வழி திறந்து விடுகின்ற ஒரு சூழலுக்கு எம்மை இரையாக்கி விடாத அவதானம் என்பது ஒரு அடங்கி வாழ்தலின் வெளிப்பாடு என்று நம்மவர்கள் கூப்பாடு போடுவதனையும் நாம் பார்க்கின்றோம். இதனை ''புலி பதுங்குவது பாய்வதற்கு'' என்ற மூதுரைக்கேற்ப செயற்படுகின்றோம் என்கின்ற உணர்தல் இங்கு முஸ்லிம்களுக்கு முக்கியமாகின்றது. இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் விட்டுப்பிடித்தல் என்ற பண்பின் அடிப்படையில் நாம் காரியமாற்றுகின்ற தருணத்தைகவனத்தில் எடுக்காது, எடுத்தோம் கவிழ்த்தோம் என்பது போல் நாம் நடந்து கொள்வது விவேகத்தின் வழியன்று. நமது பலம், பலவீனம் என்பனவற்றை நிறுத்துபார்க்காது ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுவது மட்டும் நமக்கு ஏற்றங்களை தந்துவிடாது என்கின்ற அவதானமும் அவசியப்படுகின்றது.

நம்மீது இன்று தொடரப்படுகின்ற பௌத்த - சிங்கள ஆதிக்க நெருக்குவாரங்களையிட்டு நமது மக்கள் அரசியல் பிரதிநிதிகள் நமது நாட்டு உயர்சபை நாடாளுமன்றத்தில் உணர்ச்சிபுடன் கூடிய வீர வசனங்களை பேசுவதைப் பார்க்கின்றோம். அதற்கு கைதட்டுபவர்களாகவும் எம்மை இரையாக்கிக் கொண்டிருக்கின்றோம். இதன் மூலம் நாம் கண்ட பலம்தான் என்ன?.

இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களாக இருக்கின்ற ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் ஆகியோரிடம் நமது பிரச்சினைகளை நமது மக்கள் அரசியல் பிரதிநிதிகள், நமது குடியியல் சமூகத்தில் உள்ள அமைப்புக்கள், நமது உயர் சபையான அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை உட்பட நம்மீது தொடுக்கப்படுகின்ற சிங்கள பேரினவாதத்தை ஆக்குகின்ற, கடும் போக்காளர்களை கட்டுப்படுத்துமாறு கேட்டும் அது முடிவுக்கு வராத ஒரு சூழ் நிலைதான் இன்றும் காணப்படுகின்றது.

சட்டம், ஒழுங்கு பிரச்சினையாக முஸ்லிம் மக்கள் மீது தொடுக்கப்படுகின்ற சிங்கள- பௌத்த ஆதிக்க சக்திகளின் செயற்பாட்டை காட்டி இதனை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதாக ஒரு பாசாங்கு செய்கின்ற நாடகமும் இதற்குள் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவைகள் ஒரு புறம் இருக்க இன்றைய கெடுபிடிகளை ஒரு சமூகத்தின் மீதான பாய்ச்சலாக அல்லது சிறுபான்மைச் சமூகத்தின் மீது பெரும்பான்மைச் சமூகம் முன்னெடுக்குகின்ற இனச்சுத்திகரிப்பு என்றவகைக்குள் விமர்சிக்கப்பட்டுவிடக் கூடாது என்கின்ற ஒரு பின்புலத்தை இதில் பார்த்தாலும் இந்தச் செயற்பாடுகளின் பின்னால் இன ஒடுக்குதல் அடிப்படைகளும் கூறுகளும் அதில் அடங்கியிருப்பதை மறுத்துவிட முடியாது.

நாம் இந்த சூழலிருந்து விடுபடுவதற்காக பல முயற்சிகளை அகிம்சை வழியில் நின்று முன்னெடுக்கின்றோம். அது இந்த நாட்டின் சட்டதிட்டங்களை மீறாதும் சட்ட ஒழுங்குளின் கட்டுப்பாடுகளிலிருந்தும் செயற்படுத்துகின்றோம்.

இது எமக்கு வெற்றித் தீர்வைத் தரவில்லை என்கின்ற பதிவையே அடையாளப்படுத்தி இருக்கின்றது. இதனால் நாம் மேற்கொண்ட முயற்சிகள் தவறானதென்றோ, இந்த வழிமுறைக்கு எதிரான போக்குகள் தான் சரியான தீர்வை எட்டிக்கொள்ள வழியாகும் என்கின்ற நிலைக்கு நாம் வருவதும் ஒரு உடனடித் தீர்வாக அமையாது.

நமது இன்றைய பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு இன்றைய அரசாங்கத்தை மாற்றியமைப்பதுதான் என்று நாம் சிந்திக்க தொடங்குவதும் இது விடயத்தில் ஒரு ஆரோக்கியமான அணுகுமுறையாக அமையாது என்கின்ற புரிதல் முக்கியமாகும்.

இது சிலவேளை தலையிடிக்கு தலைப்பனையை மாற்றுவது என்கின்ற கருத்தை ஒத்ததாக இருந்து விடவும் முடியும்.

நமது நாட்டில் எந்தத் தாப்பின் அரசாங்கம் அமைந்தாலும் அது சிங்கள- பௌத்த ஆதிக்க சக்திகளின் கரங்களை மீறி ஓர் அரசியலை இயங்கியலாக முன்னிறுத்துவதில் பாரிய சங்கடங்கள் இருப்பதை நாம் ஏற்றுக்கொண்ட நிலையில்தான் தீர்வுகளைத் தேட வேண்டிய சந்தர்ப்பத்தை கருத்தில் எடுக்க வேண்டியிருக்கின்றது. அந்த வகையில் பின்வரும் அம்சங்களில் நமது கவனத்தை திருப்ப வேண்டிய அவசியத்தையும் புறக்கணிக்கலாகாது.

இலங்கையின் இனவாத அரசியல் செயற்பாடு நமது நாட்டை அமைதிக்குப் புறம்பான ஒரு நிலையில் அல்லது இனவாத முறுகல் கொதிப்புக்குள் மக்களை வைத்துக்கொண்டு தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்கின்ற போக்கு நேற்று இன்று தோன்றியதல்ல.

அது நன்கு வேர் பிடிக்கப்பட்ட ஒன்றாகவும் நடப்பட்டு வளர்ந்து பல கிளைகளை பரப்பியும் உள்ளன. இந்த நிலையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாக இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

(11ஆம் பக்கம் பார்க்க...)

ஆக்க இலக்கியவாதி

கலாபூஷணம் அ.ஸ. அப்துஸ் ஸமது

அப்துல் ஸலாம் ஆலிம், ஆஸியா உம்மா தம்பதியினரின் புதல்வராக அக்கரைப்பற்றில் (07.09.1929) அப்துஸ் ஸமது பிறந்தார். ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று மெ.மி. பாடசாலையிலும், அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் பாடசாலையிலும் கற்று, 1950இல் எஸ்.ஸ்.ஸி பரீட்சையில் சித்தியடைந்து 1952இல் ஆசிரியர் நியமனம் பெற்றார். 1954-1955 காலப் பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்று, 1972-1975 காலப்பகுதியில் களனி வித்தியாலங்காரப் பல்கலைக்கழப் படிப்பை முடித்து பி.ஏ. சிறப்புப் பட்டம் பெற்றார்.

1979 - 1989 களில் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகக் கடமைபுரிந்தார். நல்ல கல்விமானாக விளங்கிய அ.ஸ. அப்துஸ் ஸமது, சிறந்ததோர் ஆக்கிய இலக்கியவாதியாகத் திகழ்ந்தார். 1959-1961களில் அவர் வெளியிட்ட 'இலக்கியப் பொய்கை' என்னும் நூல் 6ஆம், 7ஆம், 8ஆம் மாணவர்களுக்கு அக்காலப்பகுதியில் பகுதிப்பாடநூலாக அரசினால் அக்கீகாரமளிக்கப்பட்டது. திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற தமிழ், இலக்கிய நூல்களை உள்வாங்கியதாக இந்நூலின் பாடங்கள் அமைந்திருந்தன.

1968இல் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குரிய வழிகாட்டியாக அமைந்த இலக்கிய விளக்கத்துணை, தமிழ் இலக்கிய வினா - விடை, இஸ்லாம்பாட வழிகாட்டி போன்றனவும் இவரால் எழுதிவெளிவிடப்பட்டன. சுமார் 75சிறுகதைகள், 03 நாவல்கள், 40 உருவகக் கதைகள், 100க்கு மேற்பட்ட கட்டுரைகள், 25 வானொலி நாடகங்கள், 03 மேடை நாடகங்கள், வானொலிப் பேச்சுக்கள், இலக்கிய மஞ்சரி நிகழ்ச்சிகள் எனப் பல்வேறு ஆக்கங்களை எழுதி, வழங்கி இலக்கியத்தளத்தில் காலூன்றிய அ.ஸ. அப்துஸ் ஸமதுவின் 'எனக்கு வயது பதின்மூன்று' என்ற சிறுகதைத் தொகுதி 1977இல் வெளிவந்ததுடன் அவ்வாண்டுக்கான சாஹித்திய மண்டலப் பரிசையும் பெற்றது. 'தங்கை' என்னும் அவரது சிறுகதை உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர் சி.வி. வேலுப்பிள்ளையால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'ஒப் ஸேவர்' பத்திரிகையில் வெளியானது.

1979இல் வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மட்டக்களப்புப் பிரதேச மக்களது வாழ்வியலின் ஒரு பகுதியை மையமாக வைத்து அவர் எழுதிய 'பனிமலர்' என்ற நாவல் பரிசு பெற்ற நாவலாகும். 1983இல் வெளிவந்த 'களவுப்பூக்கள்' என்ற நாவலை கல்ஹின்னை தமிழ் மன்றம் நூலாக்கியது. இந்நாவலுக்கு முஸ்லிம் கலாசார அமைச்சால் பரிசும் வழங்கப்பட்டது. 1987இல் தினகரன் பத்திரிகையில் இவர் எழுதிய 'தருமங்களாகும் தவறுகள்' என்னும் நாவல் 1997இல் இஸ்லாமிய நூல் வெளியீட்டு பணியகத்தால் நூலாக வெளியிடப்பட்டது.

அ.ஸ. அப்துஸ்ஸமதின் சிறுகதைகள் அவர் பிறந்த சூழலின் மக்கள் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டிருந்தன. தமது பிரதேச மக்களின் வாழ்க்கையை பல்வேறு கோணங்களில் சிறுகதைகளாக்கி எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதினார் எனக் கவிஞர் ஏ. இக்பால் குறிப்பிட்டுள்ளார்.

அ.ஸ. அப்துஸ் ஸமதுவின் கதைகளில் பாத்திரங்கள் மிகச் சிறப்பாக அமைந்திருக்கும் அவை உயிரோட்டமுள்ள பாத்திரமாக நடமாடும் மனதில் பதிவாகும். பேச்சுத் தமிழ் அதிகம் இல்லாமல் பாத்திரங்களின் குணவியல்புகளையே அவர் வெளிப்படுத்துவார் எனப் பிரபல எழுத்தாளர் அன்புமணி கருத்துத் தெரிவித்துள்ளார். இவரது கதைகளும் சிந்தாமணியில் வெளிவந்த 'ஈர்ப்பு' என்ற கதை பெரும் சர்ச்சைக்குள்ளான போதும் பின்னர் இந்திய மாசிகை 'மில்லத்' இல் பாராட்டுதலுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டது.

மேலும் அந்தக் கிழவன், தங்கை, கலீர்கலீர் முன்றே கால்நிறம், வர்ணபேதம், மசக்கை, நெருஞ்சி முள் போன்ற இவரது கதைகள் பாராட்டைப் பெற்றுள்ளன. இவரது உருவகக் கதைகள் மிகவும் தத்துவமானவை என எஸ். முத்துமீரான் குறிப்பிட்டுள்ளார்.

மணிவிளக்கு மாசிகையில் இவர் எழுதிய கட்டுரைகள் 1957இல் 'நீரா இன்பம்' என்ற பெயரிலும் 1959இல் பிறையில் எழுதிய கட்டுரைகள் 'கலைமான் பல்கீஸ்' என்ற பெயரிலும் நூல்களாக வெளிவந்துள்ளன. 1996 இல் மணிவிளக்கு, பிறை, நண்பன், தினகரன், கலை அமுதம் என்பனவற்றில் பிரசுரமான 15 கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு 'இஸ்லாமிய இலக்கிய நோக்கு' என்ற பெயரில் வெளியானது.

பிறரது இலக்கிய படைப்புக்களைக் கொண்ட இரு தொகுப்புக்களை அப்துஸ் ஸமது வெளியிட்டுள்ளார். ஈழத்து முஸ்லிம்களில் 57 புலவர்களின் கவிதைகளைக் கொண்ட தொகுப்பு 'முற்றத்து மல்லிகை' என்ற பெயரில் 1964இல் பிறைப்பண்ணை வெளியீடாக வந்தது.

மேலும் 27 முஸ்லிம் எழுத்தாளர்களின் தொகுப்பு 'பிறைப்பூக்கள்' என்ற பெயரில் 1979இல் 4ஆவது உலக இஸ்லாமிய மாநாட்டு வெளியீடாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது இலக்கியப்படைப்புக்கள் பலராலும் பாராட்டப்பட்டன. சாஹித்திய மண்டல விருதுடன் ஆளுனர் விருது, கலாபூஷணவிருது போன்ற அரசவிருதுகளை இவர் பெற்றுள்ளார். 1989 இலங்கை முஸ்லிம் கலாசார அமைச்சு 'தாஜுல் அதீப்' பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்தது. மலேசிய 'கவிதைமாலை இயக்கம்' 1990இல் இவருக்கு 'இலக்கியத் திலகம்' பட்டம் வழங்கியது. 1996இல் அக்கறைப்பற்று தேசிய கலைஞர் பேரவையால் 'இலக்கியமாமணி' பட்டமும் 1988இல் ஓலுவில் புத்திஜீவிகள் வட்டத்தால் 'இலக்கிய செம்மல்' பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலக்கியவாதிகளால் பல்வேறு கோணங்களில் அடையாளம் காணப்பட்ட இலக்கியவாதி அ.ஸ.அப்துஸ் ஸமது, 2001 ஜூலை 01 இல் இவ்வுலகை வாழ்வைப் பிரிந்தார்.

அவரது நாமம் தமிழும் இலக்கியமும் வாழும்வரை வாழும். எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரது நற்பணிகளை ஏற்று நற்கூலி வழங்குவானாக! இந்த ஆக்கத்திற்காக புகைப்படத்தைத் தந்துதவிய மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீதுக்கு மனமார்ந்த நன்றிகள்.

கட்டாருக்கு என்றும் உதவுவோம்; தடைகளை நீக்க பாடுபடுவோம்!

இப்தார் நிகழ்வில் அர்தூகான்

''பிராந்திய மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கவோ, புதிய சுமைகளை சுமக்கவோ நாம் அனுமதிக்கக் கூடாது. துருக்கி என்ற வகையில் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை, அதன் பாதுகாப்பு, சமாதானம் என்பவற்றின் பக்கமே நாம் நிற்போம்'' - இவ்வாறு துருக்கி ஜனாதிபதி அர்தூகான் தெரிவித்துள்ளார்.

இப்தார் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''எமது புலங்களில் சுமத்தப்பட்டுள்ள பணி சத்தியத்தின் பாதையில் பயணிக்கிறது. எம்மிடம் தேவைகளை கோருபவர்களுக்கு உதவி செய்துகொண்டு எமது பயணத்தை நாம் பூரணப்படுத்துவோம்.

அநியாயம் இழைக்கப்பட்டவனிடமிருந்து வரும் அபயக்குரலை ஒருபோதும் இலகுவாக தட்டிக்கழித்து விடாதீர்கள். ஏனெனில் அது பல மடங்காகப் பெருகி உங்களுக்கே திரும்பிவரும்.

கட்டார் சிறியதொரு நாடு என்று அவர்கள் கூறுகின்றார்கள். எனினும், அது சரியானதல்ல. மீண்டும் சொல்கிறேன். அது சரியானதொன்றல்ல. பின்வரும் அல்குர்ஆன் வசனம் அதனை மிகத் தெளிவாக சொல்கிறது.

எத்தனையோ சிறிய குழுக்கள் பெருந் தொகையானோரைக் கொண்டிருந்த குழுவினரை அல்லாஹ்வின் உதவியால் வெற்றி கொண்டுள்ளன. அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் (அல்-பகறா -249).

எனவே எம்மிடமுள்ள முழு சக்தியையும் சுமத்துகொண்டு இப்பாதையில் நடைபயில்வோம்.

பிராந்திய மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கவோ, புதிய சுமைகளை சுமக்கவோ நாம் அனுமதிக்கக் கூடாது.

துருக்கி என்ற வகையில் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை, அதன் பாதுகாப்பு, சமாதானம் என்பவற்றின் பக்கமே நாம் நிற்போம்.

வேறுபாடுகள் பார்க்காமல் எமது சகோதரர்களுக்கு மத்தியில் காணப்படும் தடைகளை நீக்க, அவர்களுக்கு மத்தியிலுள்ள இணை தலங்களை நிறைவேற்ற நாம் எப்போதும் போராடுவோம்.

இன்று நாம் அந்த நோக்கத்தை நிறைவேற்றவே முனைகிறோம். மனிதர்கள் என்றவகையில் நாம் அல்லாஹ்வின் கட்டளையை பின்பற்ற முயற்சிக்கிறோம். அது என்ன கட்டளை தெரியுமா?

''சூறதுல் ஹுஜுராத்திலே அல்லாஹ் கூறுகின்றான் முஃமின்கள் சகோதரர்கள். அவர்களுக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்தி வையுங்கள்'' இதுபோன்ற தருணங்களில் அதனை மேற்கொள்ளுமாறு அல்லாஹ் எமக்கு வழிகாட்டுகிறான்.

இங்கிருந்துதான் எமது பணி ஆரம்பிக்கிறது. கட்டார் நெருக்கடிக்கு தீர்வொன்றைக் காண்பதற்காக இராஜதந்திர ரீதியிலான செறிவான நடவடிக்கைகளில் நாம் இறங்கியிருக்கிறோம்.

பதின்மூன்றிற்கு அதிகமான தலைவர்களை நான் சந்தித்திருக்கிறேன். வெளிவிவகார அமைச்சில் பணியாற்றும் எமது சார்பில் பேசவல்ல அதிகாரிகளும் அவர்களை சந்தித்துள்ளனர்.

எமது முயற்சிகளுக்கான விளைச்சலை மிக விரைவில் நாம் காண்போம் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

பெரும்பாலான முஸ்லிம்களை பாதிக்கின்ற பயங்கரவாத நிறுவனங்களின் திட்டங்களை எந்த வகையிலேனும் முறியடிக்க நாம் உடன்பாட்டுடன் பணியாற்றுவது எம்மீது கடமையாகும். கருத்துவேறுபாட்டுடனோ, முரண்பாட்டுடனோ அதனை அடைய முடியாது.

எமது துதர் (ஸல்) அவர்கள் இணைந்து பணியாற்றுவது ஓர் அருள். பிரிவினை ஒரு வேதனை என்றே கூறியிருக்கிறார்கள்.

எமது துதரின் உபதேசத்தை நாம் பின்பற்றுவது கடமையாகும். குறிப்பாக நாம் இப்போது வாழும் இந்த அருள்பொருந்திய நாட்களில் இது மிக விசேடமானதாகும். - இவ்வாறு துருக்கி ஜனாதிபதி இந்த உரையில் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தல்; ஜனாதிபதி மேக்ரான் முன்னிலை

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலின் முதல் சுற்று வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.

பிரான்ஸில் கடந்த மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலில் இமானுவெல் மேக்ரான் வெற்றி பெற்று, ஜனாதிபதியாக பதவியேற்றார். இந்த நிலையில் 577 இடங்களை கொண்ட அந்த நாட்டின் பாராளுமன்றத்துக்கு முதல் சுற்று தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் 50 சதவீதத்துக்கு அதிகமான ஓட்டுகளைப் பெறுகிற வேட்பாளர் தான் வெற்றி பெற முடியும்.

அந்த வகையில் எந்தத் தொகுதியில் எல்லாம் அப்படி எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறவில்லையோ அங்கெல்லாம் குறைந்தபட்சம் 12 சதவீத வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களை கொண்டு 2ஆவது சுற்று தேர்தல் 18ஆந் தேதி நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 8 மணிக்கு வாக்குபதிவு தொடங்கி இரவு 8 மணிக்கு நிறைவடைந்தது. தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல் அச்சுறுத்தலின் கீழ் பிரான்ஸ் உள்ளதால் 50 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இத் தேர்தலில் ஜனாதிபதி இமானுவல் மேக்ரானின் எல்.ஆர்.இ.எம். கட்சி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள 11 பிரெஞ்ச் தொகுதிகளில் 10 தொகுதிகளில் மேக்ரான் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதே நிலைதான் உள்நாட்டிலும் எதிரொலிக்கும் என கூறப்படுகிறது.

பிரான்ஸில் மேக்ரான் ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமானால் பாராளுமன்ற தேர்தலில் அவரது கட்சி தனிப்பெரும்பான்மை பெற வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தடை விதித்த நாட்டு குடிமக்கள் தொடர்ந்து கட்டாரில் தங்கலாம்

கட்டார் அரசு அறிவிப்பு

தன் நாட்டின் மீதான தடையைத் தொடர்ந்து பிரச்சினையை அதிகரிக்கக் கூடிய வழிகளை தவிர்த்து, தடை விதித்திருக்கும் நாட்டு குடிமக்கள் தொடர்ந்து கட்டாரில் தங்கலாம் என கட்டார் அரசு அறிவித்துள்ளது.

மேலும், அம்மக்கள் வழக்கம்போல தங்களது பணிகளைத் தொடரலாம் என்று அது விளக்கமளித்துள்ளது.

கடந்த வாரம் சவூதி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், ஜோர்தான், யெமன், லிபியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் கட்டாருடனான தங்களது துதரக உறவுகளை துண்டித்துக்கொண்டன. தீவிரவாத செயல்களுக்கு கட்டார் அரசு துணை போவதாகவும், குறிப்பாக தீவிரவாதத்தை ஆதரிக்கும் ஈரானுடன் அது நெருக்கமாக உறவாடுவதையும் சுட்டிக்காட்டி அவை தடை விதித்தன.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தனது வளைகுடா பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய ஒரு சில நாட்களிலேயே அரபு நாடுகள் இத்தடையை விதித்தன. ஆனால், கட்டாரின் எரிபொருள் ஏற்றுமதிக்கு இதுவரை தடை ஏதும் விதிக்கப்படவில்லை. தன் மீதான குற்றச்சாட்டுகளை கட்டார் கடுமையாக மறுத்து வருகிறது. இப்பிரச்சினைக்கு தீர்வு காண குவைத் மன்னர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்.

தடை விதித்த நாடுகளிலிருந்து சுமார் 11,000 பேர் கட்டாரில் வசிப்பதாக கூறப்படுகிறது. எனினும், தடை விதிக்கப்பட்ட நாடுகளில் வசிக்கும் கட்டார் நாட்டவர் 14 நாட்களுக்குள் தங்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அந்நாடுகள் கெடு விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவிடையே 2022 ஆம் ஆண்டில் கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளை இப்போதைய சிக்கல் பாதிக்காது என்று போட்டியை நடத்தும் பிபாவின் தலைவர் ஜியானி இன்பான்டினோ தெரிவித்தார். கடந்த 2014 ஆம் ஆண்டில் பிரேஸிலில் நடைபெற்ற போட்டி மூலம் 4.8 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டதாக பிபாவின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

உலகச் செய்திகள்

அரபு நாடுகள் புறக்கணிக்கும் கட்டாருக்கு

5 விமானம் – 3 கப்பல்களில் காய்கறி – பழங்கள் அனுப்பும் ஈரான்

கட்டார் விமானங்களுக்கு வான்வெளித்தளத்தையும் திறந்துவிட்டுள்ளது ஈரான்

புனித நோன்பு காலத்தில் அரபு நாடுகளால் திடீரென புறக்கணிப்புக்குள்ளான கட்டாருக்கு மனிதநேய அடிப்படையில் 5 விமானங்கள் மற்றும் 3 கப்பல்களில் காய்கறி மற்றும் பழங்களை அனுப்பி ஈரான் உதவிக் கரம் நீட்டியுள்ளது.

பயங்கரவாதத்துக்கு கட்டார் நாடு துணை போவதாக எழுந்த குற்றச்சாட்டு காரணமாக தங்களின் துதரக உறவுகளை சவூதி உள்ளிட்ட ஏழு நாடுகள் துண்டித்துள்ளன. இவற்றில் எமிரேட்ஸ், சவூதி, பஹ்ரைன், எகிப்து ஆகிய கட்டார் செல்வதற்கான அனைத்து வழி போக்குவரத்தையும் மூடிவிட்டன.

குறிப்பாக கட்டாருடனான அனைத்து விமான போக்குவரத்து சேவைகளும் அடியோடு நிறுத்தப்பட்டு விட்டன. மேலும் அந்நாட்டு விமானங்கள் தங்கள் நாட்டு வான்பரப்பை பயன்படுத்திக்கொள்வதையும் தடை செய்துள்ளன. இதன் காரணமாக கட்டார் வழியே செல்லும் விமான பயணிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். இந்த விவகாரத்தை சுமூகமாக தீர்த்து வைக்க குவைத் மற்றும் துருக்கி முயற்சித்து வருகின்றது.

நோன்பு காலத்தில் திடீரென இப்படி புறக்கணிப்புக்குள்ளானதால், கட்டாரில் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனைவடுத்து, கட்டாருக்கு தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உதவிகள் வழங்க தயாராக இருப்பதாக ஈரான், துருக்கி ஆகிய நாடுகள் அறிவித்தன.

இந்நிலையில், கட்டாருக்கு 5 விமானங்கள் மற்றும் 3 கப்பல்களில் சுமார் 440 டொன் எடையான காய்கறிகள் மற்றும் பழங்களை மனிதநேய அடிப்படையில் ஈரான் அனுப்பியுள்ளது. கட்டாரில் உணவு தட்டுப்பாடு நீங்கும் வரை உணவுப்பொருட்கள் தொடர்ந்து அனுப்பப்படும் என ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

மேலும், ஈரான் அரசு தனது வான்வெளித்தளம் வழியாக தினமும் 100 கட்டார் விமானங்கள் பறக்க தொடர்ந்து அனுமதியளிக்கும் எனவும் ஈரான் விமானப்படை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையை இழந்த மே: பதவி விலக கோரி போர்க்கொடி

பிரித்தானிய பாராளுமன்ற தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஏற்பட்ட சரிவுக்கு பொறுப்பேற்று, பிரதமர் தெரசா மே தன் வசமுள்ள தலைமை பொறுப்பையும், ஆட்சியையும் வேறு ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என ஐந்து அமைச்சர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

பிரித்தானியாவில் சமீபத்தில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சிக்கும் கடும் போட்டி நிலவியது. மொத்தம் உள்ள 650 இடங்களில் கன்சர்வேட்டிவ் கட்சி 318 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 262 இடங்களிலும் வென்றது.

ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையை (மெஜாரிட்டி) எந்தக் கட்சிக்கும் கிடைக்காததால், வடக்கு அயர்லாந்தின் டியுபி கட்சியுடன் கூட்டணி அமைத்து கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியமைக்க வுள்ளது. தெரசா மே மீண்டும் பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், கடந்த தேர்தலில் பெரும்பான்மைக்கும் அதிகமான இடங்களை வென்ற கன்சர்வேடிவ் கட்சியால், இம்முறை பெரும்பான்மை பெற முடியாமல் போனது அக்கட்சியினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சரிவுக்கு பிரதமர் தெரசா மே எடுத்த சில நடவடிக்கைகள்தான் காரணம் என அவர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில், கட்சித்தலைமையையும், பிரதமர் பதவியையும் தெரசா மே, மற்றொரு முக்கிய தலைவரான போரிஸ் ஜோன்சனிடம், ஒப்படைக்க வேண்டும் என ஐந்து அமைச்சர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். பிரெக்ஸிட் நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல ஜோன்சன் சரியான நபர் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

முன்னதாக தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பொறுப்பேற்று பிரதமர் தெரசா மேயின் நெருங்கிய ஆலோசகர்களான நிமோகி மற்றும் ஹில் ஆகியோர் நேற்று முன்தினம் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

12
2017 ஜூன் 13
ஹிஜ்ரி 1438 ரமழான் 18

நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி

ரமழான் முபாறக் பரிசு மழை
நவமணி

போட்டி - 01
(திங்கள் – வெள்ளி)
1ஆம் பரிசு : உம்ரா யாத்திரை
2ஆம் பரிசு : மடிக் கணனி
3ஆம் பரிசு : கணனி
22 ஆறுதல் பரிசுகள்

போட்டி - 02
(வெள்ளிக்கிழமை)
கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும்

போட்டி நிபந்தனைகள்
- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜூலை 15, 2017

1. அல் - குர்ஆனை கற்பிக்கவென முதன்முதலில் மதீனாவுக்கு அனுப்பப்பட்ட ஸஹாபி யார்?
2. இலங்கைக்கு தூது கடத்தப்பட்ட எகிப்திய சீர்திருத்தவாதி யார்?
3. நபி (ஸல்) மரணத்தைத் தொடர்ந்து மரணித்த நபிகளாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் யார்?
4. உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் இறுதி கலீபா யார்?
5. ஸஜ்தாக்களின் வகைகளைத் தருக?

நவமணி போட்டி - 12 13.06.2017 - செவ்வாய்க்கிழமை நவமணி
பெயர் :.....
முகவரி :.....
தொலைபேசி :.....
தே.அ.அ. இல.:.....
கையொப்பம் :.....

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரிந் - 0772604964, அஷ்ஷெய்க் ரிஷாத் 077 2415415

திருமலையில் பாரியளவிலான சர்வதேச வர்த்தக கண்காட்சி

நடவடிக்கைகள் குறித்து வர்த்தக சம்மேளனம் விளக்கம்

(திருமலை எம். ரீ.எம். பாரிஸ்)

திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனமும் கெபிட்டர் எக்சிபிஷன் என்ட் கென்வென்ஷன் பிரைவேட் லிமிட்டட் (சீ.ஈ.சி) நிறுவனமும் இணைந்து பிரமாண்டமான 'திருகோணமலை சர்வதேச வர்த்தக சந்தை' ஒன்றை திருமலை மெக்கேசர் மைதானத்தில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் கே.குலதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு கடந்த சனிக்கிழமை வர்த்தக சம்மேளனத்தின் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே. குலதீபன் மற்றும் சீ.ஈ.சி நிறுவனத்தின் பொது முகாமையாளர் ஸ்பென்ஸ விக்டர் ஆகியோர் கலந்து கொண்டு ஊடக மாநாட்டை நடத்தினர்.

இந்த ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே.குலதீபன், எங்களுடைய வர்த்தக சம்மேளனம் ஸ்தாபிக்கப்பட்டு 15 வருடங்களாகின்றது. 979 வர்த்தகர்கள் அங்கத்தவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். விரைவில் இளைஞர் சம்மேளனம் ஒன்று ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து வருகின்றோம். இவ்வாறான மனித வளத்தினைக் கொண்டு இயங்கும் எமது சம்மேளனத்தின் வர்த்தகர்களின் அனுகூலத்தினைக் கருத்திற் கொண்டும் திருகோணமலை மாவட்ட பெருமையினைச் சேர்க்கும் நோக்குடனும் முதற்தடவையாக மாபெரும் சர்வதேச வர்த்தகக் சந்தை ஒன்றை செப்டம்பர் 8,9,10 ஆகிய தினங்களில் திருமலையில் நடத்தவிருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இந்த சந்தையில் இந்திய மற்றும் சீன நாட்டு முதலீட்டாளர்கள் பங்குபற்ற இருப்பதுடன் 90 சதவீதமானவர்கள் உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களை பங்குபற்றச் செய்வதையே நாம் எதிர்பார்க்கின்றோம். தொழில்நுட்பம், கல்வி, மின்னியல், விவசாயம், வாகன உற்பத்தி, உள்ளூர் கைத்தொழில், மருத்துவம், உல்லாசத் துறை, கட்டட நிர்மாணம் போன்ற பல்வேறு வகையிலான துறைகள் இந்த வர்த்தக சந்தையில் உள்வடக்கியிருக்கும். இலங்கையில் நடைபெறுகின்ற இந்த மாபெரும் சர்வதேச வர்த்தக சந்தை திருகோணமலை மாவட்டத்தின் சமூகப் பொருளாதார துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என நாங்கள் நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக மாநாட்டில் திருகோணமலை சர்வதேச வர்த்தக சந்தை அமுலாக்கலுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று சீ.ஈ.சி நிறுவனத்திற்கும் திருகோணமலை மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி ஈ.எல். சேனாநாயக்க நூலகத்தில் புத்தகக்கண்காட்சி மற்றும் திரைப்பட விருது விழா இந்திய உதவித்தூதுவர் ராதா வெங்கட்ராமன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. மத்திய தென்னக்கும்புர வை.எம்.எம்.ஏ இயக்கத்தின் ஆயுட்கால பொதுச் செயலாளர் மொஹமட் நாகூர் பிச்சை மற்றும் தலைவர் எஸ்.எம். நஸார், இவர்களுடன் கண்டி தாலுதாகல்லே மகா விஹாரையின் பிரதான தேரர் டாக்டர் எத்திபொல மங்கலயும் இந்திய உதவித்தூதுவர் மற்றும் மத்திய மாகாண அமைச்சர் சாந்தி கொங்கா ஹமக ஆகியோரையும் படங்களில் காணலாம்.

மறுக்கிறார் சம்பிக்க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்திலிருந்து பாதுகாக்க முயற்சிப்பதும் திஸ்ஸ விதாரணவுடன் இரவு பகலாக உறவாடும் மஹிந்த ராஜபக்ஷவின் சீடர்களேயாகும் என்று மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

ஞானசார தேரரை சட்டத்திலிருந்த பாதுகாத்து வருகின்றீரா? என்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஞானசார தேரரை, அமைச்சர் சம்பிக ரணவக பாதுகாத்து வருவதாக லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ விதாரண நேற்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

பொதுபலசேனாவை உருவாக்கி வளர்த்து வருகின்ற மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தாபய ராஜபக்ஷவிடமே ஞானசார எங்கே இருக்கிறார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

குற்றச்சாட்டுக்கு பதிலளித்த அமைச்சர் சம்பிக ரணவக மேலும் தெரிவித்ததாவது,

திஸ்ஸ விதாரண என்பவர் மக்கள் ஆதரவிழந்த, மரியாதையிழந்த, ஓய்வுபெற்று வீட்டிலிருக்கவேண்டியவர். இதுபோன்றவர்களுக்கு நாம் பதிலளிக்கச்செல்வதில்லை. புகழ்பெற்ற சமசமாஜ வேலைத்திட்டங்களை சீர்குலைத்தவரே இந்த திஸ்ஸ விதாரண. ஞானசார தேரரும் திஸ்ஸ விதாரணவும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரே மேடையில் மஹிந்த ராஜபக்ஷவுக்காக வேலைசெய்தவர்கள்- என்றார்.

அமைச்சு பதவியை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எறிவதற்கும் எந்த நேரமும் தயாராக இருப்பதாக அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பிரதித்தலைவர் கலாநிதி ஜெமீலின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் மேலும் கூறியதாவது,

முஸ்லிம் சமூகத்தின் மீதான வன்முறைகளும் தாக்குதல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அத்தனை பேர்களிடமும் மிகவும் ஆணித்தரமாகவும் பக்குவமாகவும் முஸ்லிம் அரசியல் சக்திகளும், சமூக இயக்கங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய போதும் நாசகாரிகளின் நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

அமைச்சுப்பதவியை வகிப்பதால் நாங்கள் அடங்கிப்போகவேண்டும் என்று எவரும் தப்புக்கணக்குப் போட முடியாது சமூகத்திற்கான பாதிப்புக்கள் நிறுத்தப்படும் வரை நாங்கள் ஓயப்போவதும் இல்லை.

முஸ்லிம்களை துன்புறுத்திவரும் பொதுபல சேனா போன்ற இனவாத இயக்கங்கள் இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரானதும் முன்னராளதுமான வரலாற்றை ஆழமாக படித்துப்பார்க்கவேண்டும்.

முஸ்லிம்களும் முஸ்லிம்களின் தலைவர்களும் நாட்டுக்காக செய்த தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஆங்கிலேயர் முதல் அதன் பின்னர் உருவான தீவிரவாத இயக்கங்கள் நாட்டைத் துண்டாட முற்பட்ட போது முஸ்லிம்கள் அதனை எதிர்த்துப் போராடிய வரலாறுகளை இவர்கள் உணரவேண்டும். சிங்கள -முஸ்லிம் உறவுக்காக முஸ்லிம் சமூகத்தின் முன்னோடித் தலைமைகளான டாக்டர் டி.பி ஜாயா முதல் எம் எச் எம் அஸ்ரப் வரை பட்ட கஷ்டங்களின் வரலாறுகளை இவர்கள் படிக்க வேண்டும்.முஸ்லிம்கள் என்றுமே முஸ்லிம் தலைமைக்கும் அந்தந்த காலப்பகுதியில் ஆட்சி செய்த அரசுக்கும் கட்டுப்பட்டே வாழ்ந்திருகின்றார்கள்.

வன்முறைமீது என்றுமே நாட்டம் கொள்ளாத இந்த சமூகத்தை பொறுமை இழக்கச் செய்து இன்னுமோர் அழிவுக்கு இந்த நாட்டை இட்டுச் செல்வதற்கு இனவாதிகள் துடியாய்த் துடிக்கின்றார்கள். இதன் மூலம் முஸ்லிம்களின் பலத்தையும் பொருளாதார வளத்தையும் ஒட்டுமொத்தமாக தர்ப்பதே இனவாதிகளின் உள்நோக்கமாக இருக்கின்றது. இந்த அரசு இவர்களின் நாசகார செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம் என்றார். இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக ஸ்தாபக உபவேந்தர் எம் எல் ஏ காதர்,கிபத்துல் கரீம் உட்பட பலர் பங்கேற்றனர்.

வட மாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் முடியும் வரையில், தான் அப்பதவியை இராஜினாமா செய்யப்போவதாக தனது இராஜினாமாக் கடிதத்தில் குருகுலராசா தெரிவித்துள்ளார்.

வடமாகாண அமைச்சர்களான தம்பிராஜா குருகுலராசா மற்றும் பொ.ஐங்கரநேசன் ஆகியோருக்கு எதிராக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை, கடந்த வாரம் வடமாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் விசாரணைகள் தொடர்பான விவாதம், நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையிலேயே குருகுலராசா, தனது பதவியை தற்காலிகமாக இராஜினாமா செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மஹியங்கனை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

றஹ்மத்துல்லாஹ் மீது அபாண்டமான குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக றஹ்மத்துல்லாஹ் மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததனையடுத்தே குறித்த நபரை பொலிஸார் அழைத்து விசாரணை செய்தனர்.

விசாரணையின் போது தாள் அவ்வாறு கூறியதனை மிலிந்த என்பவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

முறைப்பாட்டாளர் றஹ்மத்துல்லாஹ் விவகாரத்தை நீதிமன்றம் வரை முன்னெடுக்க விரும்பாததனால் பொலிஸார் எச்சரித்து அவரை விடுதலை செய்தனர்.

பாதணி விற்பனை நிலையம் முன்பு நமாகவே தீ வைக்கப்பட்டதாக நகைக் கடை உரிமையாளர் றஹ்மத்துல்லாஹ் தெரிவித்தார்.

இப்பகுதியிருக்க மின் ஒழுக்கினால் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக மஹியங்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ள கூற்று தவறானது என பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் எஸ்.எம். மரிக்கார் ஆகியோர் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டினையடுத்து கடை உரிமையாளரிடம் மீண்டும் வாக்கு மூலம் ஒன்றைப் பெறுமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேநேரம் இன்று இந்த வர்த்தக நிலையத்துக்கு அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விஜயம் செய்யவுள்ளனர்.

நல்லெண்ணம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கூட்டு இணைப்புக்குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே இதனைத்தெரிவித்தார்.

தான் ஒரு இனவாதியல்ல என்றும் இனவாதத்தை ஏற்படுத்துவோருக்கு தமது பலத்த எதிர்ப்பினைத் தெரிவிப்பதாகவும் கூறிய அவர் நாட்டுக்குள் இளங்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் சமாதானத்தை சீர்குலைத்து பேதத்தை ஏற்படுத்த முற்படுவோருக்கு எதிராகக் கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படுவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

மேலும் பேசிய அவர் கூறியதாவது,

அரநாயக்க பிரதேச செயலாளர் இசட். ஏ.எம். பைசல் தொடர்பாக இந்நாட்களில் முகநூல்களில் பல விடயங்கள் பிரசுரிக்கப்பட்டு வரப்படுகின்றன. இனவாதத்தைக்கிளப்பி பிரதேச செயலாளருக்கு சேறு பூசும் ஓர் இயக்கத்தை சிலர் முன்னெடுக்கிறார்கள். இவ்வாறான கீழ்த்தரமான வேலைகளை செய்யவேண்டாம்.

அவர் ஓர் இனவாதியல்ல. சிறந்த சேவையாளர். பொய்யான விடயங்கள் எழுதி அவருக்கு சேறு பூச முற்படுகின்றார்கள். அவர் கடுதலாக வேலை செய்வது சிங்கள மக்களுக்காக அவர் எவருக்கும் வேறுபாடு காட்டாது செயற்படுகிறார்கள் என்றும் அரநாயக்க பிரதேச இணைப்புக்குழுவின் இணைத்தலைவர் லலித் திசாநாயக்க கூறினார்.

சம்பிக்க அரவணைப்பில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸார் வலைவிரித்து தேடிவருகின்ற ஞானசார தேரரை முக்கிய அரசியல்வாதியொருவர் மறைத்து வைத்து பாதுகாத்து வருவதாக ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளியாகியிருந்தபோதிலும் அந்த அரசியல்வாதி யார் என்ற சந்தேகம் தொடர்ந்தமையாலேயே இந்த உண்மையை வெளியிட நேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது,

ஞானசார தேரருக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குமிடையே நெருங்கிய தொடர்புள்ளது. இந்த பிக்கு முதலில் ஜாதிக ஹெல உறுமய கட்சியில் இருந்தவர். அத்துடன் ஜாதிக ஹெல உறுமயவின் வேட்பாளராகவும் அவர் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டார். மேலும் தற்போது ஜாதிக ஹெல உறுமயவின் தவிசாளராக இருக்கும் ஹுடிகல்லே விமலசார தேரர், ஆரம்பத்தில் பொதுபல சேனாவுடன் சம்பந்தப்பட்டிருந்தார். இதன் காரணமாக பொதுபல சேனாவுக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது எனவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

ஹஜ், உம்ரா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்திக்கு சவூதி அரேபியா மறுப்புத் தெரிவித்தே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

சவூதி நாட்டின் எல்லைக்குள் நுழைந்த பின்னர் அவர்களின் இனம், மொழி, நாடு என்பன பார்க்கப்படுவதில்லை. அவர்கள் விருந்தாளிகளாகவே பார்க்கப்படுவதாகவும் சவூதி செய்திகள் தெரிவித்துள்ளன.

மக்காவுக்குள் வரும் அனைவரும் சமமானவர்களாகவே நோக்கப்படுகின்றனர். அவர்களிடையே நிற, நாடு வேறுபாடுகள் காட்டப்படுவதில்லை எனவும் சவூதி கூறியுள்ளது.

சவூதி அரசாங்கம் வழிபாட்டுக்காக வரும் சகல தரப்பினருக்கும், சகல நாட்டினருக்கும் தனது சேவைகளை வழங்கும். சவுதியின் நிருவாக சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாக வருகை தருபவர்களுக்கே இவ்வாறு சேவைகளை வழங்கும் என சவுதியின் ஓய்வு பெற்ற முன்னாள் புலனாய்வுத் துறைப் பணிப்பாளர் பிரிகேடியர் கலாநிதி முஹம்மத் அல் மின்சாவி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்டார் மக்களின் ஹஜ், உம்ராவுக்கு சவூதி தடைவிதித்துள்ளதாக வெளியாகிய செய்திக்குரிய அழகியதொரு பதிலாகவே சவுதியின் இந்த மறுப்பு காணப்படுகின்றது. சவூதி அரசாங்கத்துக்கு உலகளவில் ஏற்படும் அவப்பெயருக்கு ஒரு பதிலாகக் கூட இந்த தகவலைக் கொள்ளலாம்.

இருப்பினும், கட்டாருக்கான தூதரகத்தை சவுதியிலிருந்து நீக்கிவிட்டு, கட்டாருடனான விமானத் தொடர்பை துண்டித்து விட்டு, கட்டாரின் தெற்கே உள்ள சவுதியின் எல்லையை மூடிவிட்டு, சகல விதமான இராஜதந்திர நடவடிக்கைகளையும் முடக்கிவிட்டு கஃபாவை மாத்திரம் திறந்து வைப்பதனால் என்ன பயன் இருக்கின்றது என்பது பொதுவாக பலரதும் கேள்வியாகும்.

அத்துடன், நாட்டு நிருவாக சட்டதிட்டங்களுக்கு அமையவே வருபவர்கள் உள்வாங்கப்படுகிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சவூதி தற்பொழுது கட்டாருடன் உள்ள சகல விதமான தொடர்புகளையும் துண்டித்துள்ள நிலையில் சவுதியின் தற்போதைய சட்டம் என்ன என்பது புரியாத புதிராகவே உள்ளது. கட்டார் நாட்டவர்கள் மக்காவுக்குள் வருவது பிரச்சினைக்குரிய ஒன்றல்ல என சவூதி அறிவிப்பதாயின் எல்லைகளை ஏன் மூடிவிட வேண்டும். விமான சேவைகளை ஏன் இரத்து செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

இன முறுகலை...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிறு சிங்களக் குழுக்களின் ஆதிக்கத்தை கவனத்தில் எடுக்காது, நாட்டின் நீண்ட கால நலன்களை முதன்மைப்படுத்தி நல்ல பல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் ஓர் உகந்த தருணமாக இதனைப் பிரயோகித்து நமது நாட்டின் அரசியல் சூழல் மாறுவதற்கான ஒரு வாய்ப்பினையும் கொண்டுள்ளது. நல்லாட்சி என்பது ஊழல்களுக்கு எதிரான நேர்மையான செயற்பாட்டை மட்டும் குறித்து நிற்பதல்ல. நாட்டில் வாழ்கின்ற அனைத்துச் சமூகங்களும் நல்லுறவோடும், நல்லிணக்கத்தோடும் நிம்மதியாகவும் அமைதியோடும் வாழ வைப்பதற்கான சூழலைத் தோற்றுவிப்பது நல்லாட்சி என்ற அம்சத்தினுள் அடங்கி இருக்கிறது என்கின்ற உணர்தலும் வேண்டும். இந்த வகையில் நாட்டின் நலன், மக்கள் பலம் என்பனவை நன்கு பேணும் வகையிலும் நீடித்த நிலைப்பேறை அடையும் மாதிரியிலும் இன்றைய அரசாங்கம் நடவடிக்கைகளை தீர்க்கமாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

இன்றைய அரசாங்கம் பாராளுமன்றத்தை தேசிய அரசுப் பேரவையாக மாற்றி வைத்திருக்கின்றது. ஆனால் அங்கு எதனை முன்னெடுப்பதற்காக இவ்வாறு மாற்றப்பட்டதோ அந்த அரசியலமைப்பாக்கம் வெறும் கூடிக்கலைவதோடு நாட்களை விழுங்கிக்கொண்டிருக்கின்றன. இதனைத் தவிர்த்து தேவையான நல்லிணக்கங்களை உறுதியாக கட்டியெழுப்புவதற்கும் பேணுவதற்கும் வகை செய்யும் நல்ல தீர்வுகளை நீண்ட கலந்துரையாடல்களுக்கு விடாது,உடனடியாக அரசியல்அமைப்பாக்கம்செய்வதற்கு உள்வாங்கி நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு கவனம் எடுத்தாக வேண்டும்.

பெருந் தேசிய கட்சிகள் இரண்டும்ஒன்றினைந்து ஆட்சியமைப்பதென்பது பல பாதகங்களைக் கொண்டதென்ற அரசியல் ரீதியான விமர்சனங்கள் ஏற்கத்தக்கனவாக இருந்த போதிலும் சில நல்ல திட்டங்களைக் கொண்டு வருவதன் ஊடாகவே இந்த விமர்சனங்களை பொய்யாக்கி, நன்மைகளையும் கொண்டுவர முடியும் என்கின்ற உதாரணத்தையும் ஏற்படுத்திக் காட்ட முடியும்.

தனிக்கட்சிகள் அரசாங்கமாக அமைந்திருந்த போது அவை தனது ஆட்சியை நிலைநிறுத்தும் முகமாக முன்னெடுத்த அரசியல் அமைப்பு உருவாக்கங்களின் போது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு எதை அமுல்ப்படுத்தஎண்ணினார்களோ அதை அரசியலமைப்பாகஎழுதிய வரலாறு நமது நாட்டுக்குண்டு.

அதே போன்று ஆட்சிக்கெதிரான கலகங்களை பௌத்த பிக்குகள் முன்னின்று நடத்த முற்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களை பொலிஸார் கலைத்து விரட்டிய சம்பவங்களும் தனிப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் நமது நாட்டில் பதிவாகாமல் இல்லை. இவைகள் எதனை நமக்கு எடுத்துக்காட்டுகின்றதென்றால் அமைந்திருக்கின்ற அரசாங்கம் எவற்றை அமுல் நடத்த விரும்புகின்றதோ அதற்கு இசைவாக காய்களை நகர்த்துவதில் பின்னிற்காத கோணமாகும்.

ஆகவே இன்றைய தேசிய அரசாங்கம் நாட்டு நலனுக்குத் தேவையானவைகளையும் நல்லிணக்கம் குலையாத நிலைப்படுத்துதலுக்கும் தேவையாகின்ற செயற்பாடுகளையும் விமர்சனங்களுக்கு அஞ்சாது முன்னெடுப்பதற்கு முன்வருவதில்தான் தங்கியிருக்கின்றது. இதில் இந்த நாடு பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது என்ற கருத்தோட்டத்தினால் ஏற்பட்ட கசந்த அனுபவங்களை முன்னிறுத்தி, பல்லின சமூகங்களைக் கொண்ட பன்மைத்துவ நாடு என்ற தோரணையில் எமது புதிய அரசமைப்பாக்கத்தை உருவாக்கிக் கொள்வதில்தான் இன நல்லுறவும் நாட்டின் அமைதியும் தங்கியுள்ளது.

தடைகளால்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கட்டாரின் பொருளாதார நடவடிக்கைகள் வழமைபோன்று நடைபெறுகின்றது. எமது சந்தை அனைவருக்கும் திறந்தே உள்ளது. பங்குச்சந்தையும் வளர்ச்சிகண்டுள்ளது. நாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவே அதிகமானோர் எண்ணியுள்ளனர். நாம் ஒரு டொலரை இழந்தால் அவர்களும் ஒரு மொலரை இழப்பார்கள் என்பதை மறந்துபோயுள்ளனர்.

புதிய கட்சிகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்தது.

அந்தவகையில், முதலாவது அழைப்பில் கலந்து கொண்ட 95 புதிய கட்சிகள் மற்றும் இரண்டாவது அழைப்பில் கலந்து கொண்ட 16 புதிய கட்சிகளுக்குமான நேர்முகப்பரீட்சைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்றும் அது அறிவித்தது.

இந்நிலையில், இவை தொடர்பில் எதிர்வரும் வியாழனன்று கூடும் கட்டத்தின்போது ஆராயப்பட்டு தகுதியானக் கட்சிகள் தெரிவு செய்யப்படும் என்றும் ஆணையகம் மேலும் குறிப்பிட்டது.

உயிர் அச்சுறுத்தலால்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டது. மேலும், ஞானசார தேரரை கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்குமாறு அரச சட்டத்தரணி விடுத்த கோரிக்கையையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இதன்போது நிராகரித்தது.

அத்தோடு, இவ்வழக்கு தொடர்பான அடுத்தக்கட்ட விசாரணைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் எடுத்துக் கொள்ளப்படும் என நீதிமன்றம் அறிவித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனவாதத்தை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொலன்னாவையில் நேற்றைய தினம் இடம்பெற்ற கூட்டத்தையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஜனநாயகத்தையும், நல்லிணக்கத்தையும், சுதந்திரமாக வாழும் சூழலையும் ஏற்படுத்துவதற்காக தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்தே மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்பி இவ்வரசை ஆட்சியில் அமர்த்தினார்கள்.

ஆனால், இவ்வரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் நாட்டின் நிலைமை தலைகீழாகியுள்ளது. கடந்த காலத்தில் செயற்பட்ட இனவாதக் குழுக்களும் அமைப்புக்களும் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

இதனை கட்டுப்படுத்த அரசு தாமதிக்கின்றமையால் அரசின் மீதான நம்பிக்கையும் மக்கள் மத்தியில் குறைந்துக் கொண்டே வருகின்றது. மேலும், கடையொன்று எரிந்தால் அது மின் ஒழுக்கினால் ஏற்பட்டிருக்கலாம் அல்லது காப்புறுதியைப் பெற்றுக் கொள்வதற்காக எரிக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸாரும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களைக் கூறுவதால் பொலிஸார் மீதான நம்பிக்கையும் தற்போது முற்றாக இல்லாமல் போய்விட்டது.

நாம் ஜனநாயகமாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்காகவே இந்த அரசை ஆட்சியில் அமர்த்தினோம். ஆனால், நாட்டில் இடம்பெறும் இனவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்தாவிடின் மஹிந்த அரசுக்கு நேர்ந்த கதியே இந்த அரசுக்கும் நேரும் என்பதையும் கூறிக்கொள்ள வேண்டும்.

இதுவிடயங்கள் குறித்து அரசு தொடர்ந்தும் பராமுகத்துடன் செயற்படுமாக இருந்தால் நிச்சயமாக இப்பிரச்சினை பெரிதாகும் அபாயம் காணப்படுகின்றது. எனவே, இனவாதிகளை கட்டுப்படுத்த அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

Sports செய்திகள்

சச்சின் சாதனையை முறியடித்த தவான்

சம்பியன் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் ஷிகர் தவான் 78 ஓட்டங்களை எடுத்தன்மூலம், ஐ.சி.சி. நடத்தும் ஒருநாள் போட்டித் தொடரில் அதிவேகமாக ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற சாதனையை தவான் படைத்தார். அவர் 16 இன்னிங்ஸில் 1000 ஓட்டங்களைக் கடந்தார். இதற்கு முன்பு சச்சின் டெண்டுல்கர் 18 இன்னிங்ஸில் ஆயிரம் ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. அதை ஷிகர் தவான் முறியடித்தார். சவுரவ் கங்குலி (இந்தியா), கிப்ஸ் (தென்னாபிரிக்கா), மார்க் லொக் (அவுஸ்திரேலியா) ஆகியோர் 20 இன்னிங்ஸில் 1000 ஓட்டங்களை எடுத்து உள்ளனர்.

மேலும், இவர் கடந்த 2013இல் நடைபெற்ற சம்பியன் கிண்ணத்தில் (363 ஓட்டங்கள், 5 போட்டி), 2015இல் நடைபெற்ற 50 ஓவர் உலகக்கிண்ணத்தில் (412 ஓட்டங்கள், 8 போட்டி), தற்போது நடைபெற்றுவருகின்ற சம்பியன் கிண்ணத்தில் (271 ஓட்டங்கள், 3 போட்டி) என 1046 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அடுத்த இரண்டு இடங்களில் சங்கக்கார, ரோஹித் சர்மா உள்ளனர்.

ஜமைக்காவிலிருந்து விடைபெற்றார் போல்ட்

தனது சொந்த மண்ணில் இடம்பெற்ற, இறுதி 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்ற உலகின் மிக வேகமான மனிதனான உசைன் போல்ட் வெற்றியுடன் விடைகொடுத்தார். உசைன் போல்ட் (30), இதுவரை 8 ஒலிம்பிக் பதக்கங்களையும், 13 முறை உலக சாம்பியன் பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

ஜமைக்கா தலைநகரான கிங்ஸ்டன் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 100 மீற்றர் கிராண்ட் பிரிக்ஸ் ஓட்டப் பந்தயத்தின் இறுதிப்போட்டியில் போல்ட் பங்கேற்றார். ஐந்தாம் இலக்க ஓடுபாதையில் இருந்து தனது ஓட்டத்தை தொடங்கிய உசைன் போல்ட், ஆரம்பத்தில் சற்று தளர்வாக ஓடினார். பாதி தூரத்தை கடந்த பின்னர், தனது வழக்கமான மின்னல்வேக ஓட்டத்தால் அரங்கத்தில் இருந்த சுமார் 30 ஆயிரம் பார்வையாளர்களை அசத்தினார். தனது சொந்த மண்ணில் உசைன் போல்ட் கலந்துகொள்ளும் கடைசி ஓட்டப் பந்தயமான இந்தப் போட்டியை சர்வதேச தடகளப் போட்டிகளின் தலைமை சங்கத் தலைவர் செபாஸ்டியன் கோ மற்றும் ஜமைக்கா நாட்டின் பிரதமர் ஆன்ட்ரு ஹோல்னெஸ் ஆகியோர் நேரில் கண்டு களித்தனர். 10.03 விநாடிகளில் எல்லைக்கோட்டை கடந்த உசேன் போல்ட் இந்தப் போட்டியில் முதலிடத்தை பிடித்து வெற்றி பெற்றார். இவ்வாண்டில் அவர் பங்குபெற்றும் முதலாவது ஓட்டப் பந்தயமும் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் லண்டன் நகரில் நடைபெறும் சர்வதேச தடகள சம்பியன்ஷிப் ஓட்டப் பந்தயப் போட்டிக்குப் பின்னர், ஓய்வு பெறப் போவதாக உசைன் போல்ட் அறிவித்துள்ளார்.

உலக தடகளத்தில் 100 மற்றும் 200 மீற்றர் உலக சாதனையை தன்வசத்தே கொண்டுள்ள போல்ட், 2008 பீஜிங், 2012 லண்டன், 2016 றியோ ஒலிம்பிக் போட்டிகளில் 100, 200 மீற்றர் மற்றும் 4*100 அஞ்சலோட்டப் போட்டிகளில் தங்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் பின்னர் ஊடகங்களுக்கு போல்ட் கருத்து வெளியிடுகையில், இதற்கு முன் நடைபெற்ற போட்டிகளை விட இப்போட்டியில்தான் அதிகளவு மன அழுத்தங்களுக்கு உள்ளானேன். பெரும்பாலும் என வாழ்க்கையில் இதுதான் மிகவும் மோசமான போட்டியாக இருக்கலாம். ஆனால் பல வருடங்களாக இந்த நாட்டு மக்கள் எனக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி செலுத்தும் வகையில் இங்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் மறக்கமுடியாத அனுபவமொன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என நான் நினைத்தேன். ஆனால் எதிர்பார்த்தளவில் இது அமையவில்லை என போல்ட் தெரிவித்தார்.

தந்தையானார் ரொனால்டோ

புகழ்பெற்ற கால்பந்து வீரர் 32 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு வாடகை தாய் மூலம் ஆண், பெண் என்று இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளன.

போர்த்துக்கல் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ, 32. ரியல் மெட்ரிட் கழகத்துக்காகவும் விளையாடி வருகிறார். இவருக்கு 7 வயதில் கிறிஸ்டியானோ ஜூனியர் என்ற மகன் உள்ளார். இவரின் தாயார் யார் என இதுவரை ரொனால்டோ அறிவிக்கவில்லை. தற்போது, ஸ்பெயின் மொடல் அழகி இரினா ஷேக்கை ரொட்ரிக்சுடன் பழகி வருகிறார். இந்நிலையில், வாடகை தாய் மூலம் ஒரு ஆண் மற்றும் பெண் என இரட்டைக்குழந்தைக்கு இவர் தந்தை ஆகியுள்ளார். ஆண், பெண் என்று இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளன. எவா, மாட்டேவ் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்குழந்தைகளின் தாயார் அமெரிக்காவில் வசிப்பதாக கூறப்படுகிறது. இந்த தகவலை, பிரிட்டனிலிருந்து வெளிவரும் நாளிதழ் செய்தியாக வெளியிட்டுள்ளது. இருப்பினும், ரொனால்டோ இதை உறுதிப்படுத்தவில்லை.

ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்:

இலங்கையிலிருந்து 22 வீரர்கள் பங்கேற்பு

பீ.எப்.எம் நிஷாட்

எதிர்வரும் ஜூலை மாதம் இந்தியாவின் ஒடிசாவில் நடைபெறவுள்ள 22ஆவது ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் 22 வீரர்களை பங்குபற்றச் செய்வதற்கு தேசிய மெய்வல்லுநர் சங்க தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது. இக்குழாமில் நடைபோட்டிகளில் பங்குபற்றுகின்ற வீரர்களைத் தவிர மற்றைய அனைத்து போட்டிகளுக்குமான வீரர்களும் அறிவிக்கப்பட்டுள்ளர். அத்துடன் இக்குழாமில் இடம்பெற்றுள்ள 11 வீரர்கள் அஞ்சலோட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்களில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுக்கொண்டுள்ள உசாரம் பாய்தல் வீரர் மஞ்சுள குமார மற்றும் 800 மீற்றர் ஓட்டப்பந்தய வீராங்கனை நிமாலி லியனாரச்சியும் இம்முறை போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ளனர்.

எனினும், நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தும் வீரர்களுக்கும் இப்போட்டியில் வாய்ப்பு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மெய்வல்லுநர் தெரிவுக்குழுவின் தலைவர் சமன் குமார தெரிவித்தார்.

அத்துடன் இம்முறை ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தெரிவாகியுள்ள பெரும்பாலான வீரர்கள், போட்டித் தொடருக்கான அடைவு மட்டத்தை பூர்த்தி செய்துள்ள நிலையில், உலக மெய்வல்லுநர் தரப்படுத்தலில் முதல் 100 இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆசிய மெய்வல்லுநர் போட்டித் தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கு இந்திய மெய்வல்லுனர் சம்மேளனத்தின் பூரண அனுசரணையுடன் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் குறித்த போட்டித் தொடர் நடைபெறவுள்ள ஒடிசாவில் விசேட தங்குமிட பயிற்சிகளும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மெஸ்சிக்கு ஜூன் 30இல் திருமணம்

ஆர்ஜென்டைனா கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான லியொனல் மெஸ்சி, தனது பள்ளிப் பருவ தோழியான அன்டோனெல்லா ரோக்குஸ்ஸோவை இம்மாத இறுதியில் திருமணம் செய்து கொள்ள உள்ளார். இதற்காக மெஸ்சியின் சொந்த ஊரான ரொசாரியோ தயாராகி வருகிறது.

எதிர்வரும் 30ஆம் திகதி மெஸ்சி - அன்டோனெல்லா ரோக்குஸ்ஸோ திருமணம் நடைபெற உள்ளதை மெஸ்சியின் செய்தி தொடர்பாளர் உறுதி செய்துள்ளார். இந்த திருமணம் மெஸ்சியின் 30ஆவது பிறந்தநாள் (ஜூன் 24) முடிவடைந்த அடுத்த ஒருவாரத்தில் இடம்பெறவுள்ளது. மெஸ்சியின் திருமணம் வத்தின் அமெரிக்க முறையில் நடைபெற உள்ளது. இந்த திருமணத்தில் பார்சிலோனா அணி வீரர்களான நெய்மர், லூயிஸ் சுவாரஸ், செஸ்க் ஃபேப்ரே காஸ், சேவி ஹெர்னான்டஸ் உள்விட்டோர் கலந்து கொள்ளக் கூடும் என ரொசாரியோவில் இருந்து வெளிவரும் லா கேபிடல் என்ற நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. மெஸ்சி - அன்டோனெல்லா ரோக்குஸ்ஸோ ஜோடிக்கு திருமணம் ஆகவில்லை என்றாலும் 4 வயதில் தியாகோ என்ற மகனும், ஒரு வயதில் மேடியோ என்ற மகனும் உள்ளனர்.

19 வயதின் கீழ் தேசிய கால்பந்து அணி வீரர்கள் தெரிவு இன்று ஆரம்பம்

பீ.எப்.எம் நிஷாட்

ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான சம்பியன்ஷிப் தொடருக்கான தகுதிகாண் போட்டிகள் 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நிலையில், அதற்கான இலங்கை தேசிய அணியை தெரிவு செய்வதற்கான வீரர்கள் தெரிவு இன்று ஆரம்பமாகவுள்ளதுடன், 2ஆவது சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளன. அதற்கமைய இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்படும் இந்த வீரர்கள் தெரிவு கொழும்பு சிபு கால்பந்து மைதானத்தில் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. குறித்த அணித் தெரிவில் 1999ஆம் ஆண்டு ஜூலை 01ஆம் திகதிக்குப் பின்னர் பிறந்த வீரர்கள் நாட்டின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் கலந்து கொள்ளலாம். இத் தெரிவில் பங்குகொள்ள வேண்டிய பிரதேசங்களை இலங்கை கால்பந்து சம்மேளனம் இரண்டு நாட்களுக்கு பிரித்து வழங்கியுள்ளது.

இதன்படி, இன்று நடைபெறவுள்ள தெரிவுப் போட்டிகள் வட மாகாணம், கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், வட மத்திய மற்றும் வட மேல் மாகாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வீரர்களுக்கு இடம்பெறவுள்ளதுடன், எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ள தெரிவுப் போட்டிகள் தென் மாகாணம், மேல் மாகாணத்தைச் சேர்ந்த வீரர்களுக்காகவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெறவுள்ள குறித்த தகுதிகாண் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி ஏனைய தெற்காசிய நாடுகளான மாலைதீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளோடு குழு பி யில் இடம்பிடித்துள்ளது. இக்குழுவில் உஸ்பெகிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளோடு போட்டியை நடாத்தும் மலேசியாவும் அங்கம் வகிக்கின்றது.

ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான சம்பியன்ஷிப் தகுதிச் சுற்றுப் போட்டிகள் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானை வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் பதிலடி

சுற்றுலா ஆப்கானிஸ்தான் அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சென்றுள்ள ஆப்கானிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது. இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் செயின்ட் லூசியாவில் நடைபெற்றது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி, அந்த அணி 37.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களை பெற்றது. முன் வரிசை வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பொறுப்பாக விளையாடிய குல்பதின் (51) அரைச்சதமடித்து ஆறுதல் கொடுத்தார்.

ஆப்கானிஸ்தான் அணி 37.3 ஓவரில் 135 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மேற்கிந்தியா சார்பில் கேப்ரியல், ஹோல்டர், ஜோசப், நர்ஸ் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சுலப இலக்கை விரட்டிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு முதல் போட்டியைப் போல் சுழற்பந்தில் ரஷித் கான் அச்சுறுத்தினார். இவரது சுழலில் எவின் லீவிஸ் (33), பாவெல் (12), ரால்டன் சேஸ் (9) சிக்கினர். குல்பதின் பந்தில் கார்டர் (2), ஜேசன் முகமது (2) ஆட்டமிழந்தனர். பொறுப்பாக விளையாடிய ஹோப், அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இதன்படி, மேற்கிந்திய தீவுகள் அணி 39.2 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 138 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. ஹோப் (48), கேப்டன் ஹோல்டர் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆப்கானிஸ்தான் சார்பில் ரஷித் கான் 3, குல்பதின் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. மூன்றாவது மற்றும் கடைசி போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி செயின்ட் லூசியாவில் நடைபெறவுள்ளது.

லண்டன் மைதானத்தில் திருடனான மல்லையா

லண்டனில் நடைபெற்ற இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டியைக் காண வந்த விஜய் மல்லையாவை, இந்திய ரசிகர்கள் திருடன் திருடன் என கூக்குரலிட்டு கேலி செய்துள்ளனர்.

இந்தியாவில் பல்வேறு வங்கிகளில் 9 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கி திருப்பி செலுத்தாமல் இருக்கும் பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா, லண்டனுக்கு தப்பிச் சென்றார். இதுதொடர்பாக அமுலாக்கத்துறை சம்மன் அனுப்பியும் அவர் ஆஜராகாமல் இருக்கிறார். இதைவைத்து அவரை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இங்கிலாந்தில் இருந்து அவரை கொண்டுவரும் முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த 4ஆம் திகதி இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை காண விஜய் மல்லையா வந்திருந்தார். அவர் போட்டியை ரசித்த காட்சிகள் ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையைக் கிளப்பின.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தியா - தென்னாபிரிக்க போட்டியைக் கண்டுகளிக்க வந்த விஜய் மல்லையாவைப் பார்த்த இந்திய ரசிகர்கள் சிலர், திருடன், திருடன் என்று கூக்குரலிட்டனர். நீல நிற பிளேசர் அணிந்திருந்த மல்லையா, புகழ்பெற்ற ஜேக் ஹாப்ஸ் நுழைவுவாயில் வழியாக உள்ளே நுழைந்தார். அப்போது அவரைக் கண்ட இந்திய ரசிகர்கள் சிலர் திருடன், திருடன் என்று கத்தத் தொடங்கினர். ஒரு ரசிகர் அவரைப் படம் பிடிக்க, மற்றொருவரோ மைதானத்துக்குள் திருடன் நுழைவதைப் பாருங்கள் என்று கத்தினார். ஆனால் இதைப் பற்றிக் கவலை கொள்ளாத மல்லையா, தன்னுடைய வழக்கமான அலட்சியப் போக்குடன் மைதானத்துக்குள் நுழைந்து போட்டியைக் கண்டுகளித்தார்.

இந்தியாவுடன் தோல்வி: டிவில்லியர்ஸ் புலம்பல்

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சாம்பியன் கிண்ணத் தொடரின் இந்தியாவுடனான போட்டியில் தென்னாபிரிக்கா அணி தோல்வியை சந்தித்தது. இதனால் அரையிறுதி சுற்றுக்கான வாய்ப்பை தென்னாபிரிக்கா இழந்தது. இந்நிலையில் இந்தியாவுடனான போட்டி முடிந்த பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் டிவில்லியர்சிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டது.

அதற்கு அவர் பதில் அளிக்கையில், ஐசிசி நடத்தும் தொடர்கள் வித்தியாசமானவை, அத்தொடரில் புதிய மற்றும் ஏற்கனவே மோதிய அணிகள் என்று வெவ்வேறு விதமான அணிகளை எதிர்கொள்கிறோம். அப்போது அத்தொடர் சவால் நிறைந்த தொடராக காணப்படுகிறது. இதனால் அது எளிதான தொடராக மாறிவிடாது. இருப்பினும் இது போன்ற தொடர்களின் போது நாங்கள் சிறப்பாகத்தான் செயல்படுகிறோம். இருப்பினும் தொடரின் முக்கியமான கட்டத்தில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. தான் ஒரு நல்ல தலைவர் என நம்புகிறேன். அணியை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்வேன். எனினும், எதிர்வரும் 2019ஆம் நடைபெறவுள்ள 50 ஓவர் உலகக்கிண்ணப் போட்டிகள் வரை அணியை சிறப்பாக வழிநடத்தி உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் விளையாடத் தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

பார்சிலோனா ஜேர்சிக்கு சவூதியில் சிறை

கட்டார் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை தொடர்ந்து சவூதி அரேபிய அரசாங்கம் தனது நாட்டில் பார்சிலோனா கால்பந்தாட்ட அணியின் ஜேர்சியை அணிய தடைவிதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த 4 பருவ காலங்களாக ஸ்பெயினின் பிரபல கால்பந்து கழகமான பார்சிலோனா அணியின் அனுசரணையாளர்களாக கட்டார் எயார்வேஸ் நிறுவனம் திகழ்கிறது. இந்நிலையில், பார்சிலோனா அணியின் சட்டைகளில் கட்டார் எயார்வேஸ் என்று பொறிக்கப்பட்டிருப்பதே இத்தடை உத்தரவுக்கு காரணமாகும். எனவே, இத்தடையை மீறுபவர்களுக்கு 60,000 ரியால் மற்றும் 15 ஆண்டுகள் வரை சிறைதண்டனை வழங்கப்படுமென அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 13TH JUNE 2017